சிவமயம்

குமரகுருபரன்



மலர் 14] 1963-௵ புரட்டாசி-௴ 1ம் ௳ (17-9-63) [இதழ் 9

ஆசிரியர் குழு

உள்ளுறை

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 14 || சோபகிருது-ஸு புரட்டாசித் திங்கள் 1-ம்வ [17-9-63] || இதழ் 9

சிதம்பரச் செய்யுட் கோவை

சீலத்திரு சிவஞானதேசிக சுவாமிகள் அவர்கள்

வந்தவாசி

[கட்டுரை 72]

(க)

செந்தமிழ் முருகன் தோற்றம் பண்டைய நூல்களிலும் இன்றைய நூல்களிலும் ஒருவாறுகக் கிளக்கப்பட்டிலது. சமயச் சார்புடைய கதைகளுட் பெரும்பாலன தம்மை உணர்த்தும் நூல் வேறுபாட்டைப் போலவே தாமும் வேறுபடுகின்றன. திருமால் கண் பெற்ற வரலாறும் அதனை ஒத்தபிற வரலாறுகளும் தல புராணங்களுள் ஒன்றுபட உரைக்கவில்லை. அவ்வாறே காளி

வரலாறும் உளது. 'உமையவள் காளவுரியினில் உயிர்த்த ஒள் ளிழை'(-உமாதேவிதன்கரியவண்ணச்சட்டையில்உயிர்ப்புற்றுத்- தோற்றுவித்த காளி) என்றும், "அரந்தைதீர் கவுரி கூற்றில் தோன்றிய அணங்கும் என்னை, வரைந்து கொண்டருள்மோ என்று வணங்கி நின்றிரப்ப அந்நாள், கரந்தைவார் சடையோன் மன்றல் முடித்துநீ கச்சிமுதூர், புரந்து இவண் உறைதி துர்க் காய் என்று அருள்புரியப் பெற்று;" "கன்னிகாப்பு எனும்பேர் எய்தக் கவுசிகி மடந்தை காஞ்சிப், பொன்னகர் காவல் பூண்டு பொங்கொளிக் கவுசிகீசன், றன்னை அங்கு இருவிப் பூசை தழைத்த பேரன்பின் ஆற்றி, இன்னல் தீர்ந்து உலகம் உய்ய இருந்தனன் இருக்கும் நாளில்;"

"கம்பனே நிகம்பன் என்போர் உலகெலாம் துளக்க நோக்கி,
அம்புயக் கடவுள் போந்தங் கண்ணலுக்கு இயம்பி வேண்ட
எம்பிரான் அருளாற் கன்னி விந்தவெற்பு எய்தி வைகி,
வெம்புவாள் அவுணர்தம்மைச்செகுத்துமீண்டு இனிதுவாழ்ந்தாள்."

என்றும் காஞ்சிப் புராணத்தில் பதிகத்திலும் திருமணப் படலத் திலும் சொல்லப்பட்டுள்ளன. ஆசிரியர் மாதவச் சிவஞான யோகிகள் அருளியவாறே அப்புராணத்திற்குரிய மூலநூலும் மொழிகின்றது. அதைத் தெலுங்கிற் பார்க்கலாம். வடமொழிப் புராணம் தெலுங்கெழுத்தில் பொறித்திருக்கின்றது.

இவ்வரலாற்றில், காளியின் தோற்றம் உமாதேவியாரது கருஞ்சட்டையில் என்பது அறியப்படுகின்றது. கருஞ்சட்டைக் கும் தோற்றம் யாது என்பது அறிந்து, அச்சட்டைப் பகைவர் அசட்டையுறல் நன்று. வாமை முதலிய எண்மருள் அடங்கும் காளி அன்று இது. மாயா சத்தியாகிய காளியைக் கோடலே தக்கது. அருட்சத்தி பேதத்துள் ஒன்றுகக் கொள்ளற்க.

அக்காளியோ சிவனெடு கூத்துப் போட்டி நிகழ்த்தினுள்? இல்லை. எத்தனேயோ காளியுள் அவள் ஒருத்தி ஆவாள். போட்டியிட்டுக் கூத்தாடித் தோற்ற காளியை நினைப்பூட்டித் தில்லை முதலிய தலங்களில் இருக்கும் காளியைப் பலர் அறிவர். அவளை நினைந்து, ஆசிரியர் குமரகுருபர முனிவர்,

"காளி ஆடக் கனல் உமிழ் கண்ணுதல்
மீளி ஆடுதல் பாருமே
மீளி ஆடல் வியந்து அவள் தோற்றெனக்
கூளி பாடிக் குனிப்பதும் பாருமே பாருமே."

எனப் பாடியருளினுர். இதில், ஆட ஆடுதல் பாருமே, ஆடல் வியந்து, தோற்றெனப் பாடிக் குனிப்பதும் பாருமே பாருமே என்று வினைமுடிபு அமைந்துள்ளவாறறிந்தால், பொருளை எளி தின் உணரலாம். கற்றுவல்லரல்லாதாரும், கற்றுவல்லாரும் இங்கு ஒன்று உணர்தற்குரியர். குறிப்புரை யெழுதிய பிள்ளை அவர்கள் 'தோற்றென' என்றதற்குத் 'தோற்றமை குறித்து' என் றெழுதினுர். அப்பொருள் இலக்கண சம்பிரதாயத்தை உணராது எழுதப்பட்டதாகும். ஆயினும், அவர்பாற் குற்றம் இல்லை. தமிழகம் தனது முதல் நூலை மறந்துவிட்ட குற்றமே அதற்கு ஏது.

இச் செய்யுளின் பொருளை முதற்கண் உணர்ந்து கொண் டால், அவ்விலக்கணம் இனிது புலப்படும். கனல் உமிழ்கண் நுதல் – திரிணேத்திரத்துள் நெற்றித்திக்கண். அக்கண்ணுடைய சிவன் மீளி. சிறப்புடைய தலைவனை மீளி என்பர். போரில், பகைவரை வென்று மீளும் ஆற்றல் உடைய சிறப்பினனை (வீரனை) மீளி என்றனர் தொல்லோர். அது சிறப்புற்ருர்க் கெல்லாம் பொதுப் பெயராயிற்று. காளி ஆட, மீளி ஆடுதலைப் பாரும். அம்மீளியின் ஆடலை அக்காளியே வியந்து தோற்ருள். தோற்றதால், கூளிகள் பாடி ஆடிக் காளியின் குறைவை நிறையத் தூற்றின. அக்கேலிக் கூத்தைப் பாரும் பாரும் என்பது பாடற்பொருள்.

காளி ஆட மீளி ஆடுதல் என்றதைச் சூரன் பொரச் சுப்பிரமணியன் பொருதல் என்பதுபோலக் கொள்க.

அவள் தோற்றெனக் கூளிபாடிக் குனிப்பது என்றதில் உள்ள வினையெச்சம் 'சோலைபுக்கென வெப்பம் நீங்கிற்று' என்றதில் உள்ளது போன்றது. 'உண்டெனப் பசிகெட்டது' 'உரைத்தென உணர்ந்தான்' 'மருந்து தின்றெனப் பிணி நீங்கிற்று' என்பவையும் அன்னவையே. கூளிகள் பாடியாடிக்

கேலி செய்வதன் காரணம் காளிக்குத் தோல்வி உண்டாயினமையே. தோற்றேரைப் பார்த்துக் கேலி செய்தல் உலகியற்கை அன்றே! மிளியாடி வெற்றி பெற்றதும் கண்டு காளியாடித் தோல்வியுற்றதும் கண்ட கூளிகள் பாடி, ஆடிக்கேலி செய்தன. அக்கேலிச் செய்கை காரியம். காளியின் தோல்வி காரணம். 'புக்கென' என்றதிற் ககரமும், 'உண்டென' 'என்றதில் டகரமும்' 'உரைத்தென' என்றதில் தகரமும் 'தின்றென' என்றதில் றகரமும் 'என' என்னும் சொல் ஏறிநிற்றற்கு இடங்கொடுத்த மெய்கள்.

இங்குச் சேனவரையர் எழுதியதை நோக்குமின்! "என என்பது கடதறவூர்ந்து இறந்த காலம் பற்றி முடிக்குஞ் சொல்லான் உணர்த்தப்படும் தொழிற்குத் தன் முதல் நிலைத் தொழில் காரணம் என்பது படவரும்" என்று சேனவரையம் செப்புகின்றது. நச்சினர்க்கினியர் 'உணரப்படும்' என்றும் 'காரணமாய விரைவுப் பொருள் உணர்த்தும்' என்றும் சிறிது வேறுபடுத்தியுரைத்தார். அவ்வேறு பாட்டை உணர்த்தப்புகின் விரியும். அதன் பயன் இங்கு வேண்டா. சேனவரையர், முடிக்குஞ் சொல் என்றது; 'என' என்னும் ஈற்றையுடைய வினையெச்சமாகிய சொல்லை முடிக்கும் சொல்லை 'சோலைபுக்கென வெப்பம் நீங்கிற்று' என்ற சொற்றொடரில், 'புக்கென' என்பதை முடிக்கும் சொல் 'நீங்கிற்று' என்பதாகும். அதனல் உணர்த்தப்படும் தொழில் நீங்குதல் என்பது. 'புக்கென' என்பதில் புகுஎன்பது முதல் நிலை. சொல் அம்முதல் நிலைத் தொழில் 'புகுதல்' என்பது. முடிக்குஞ் லாகிய நீங்கிற்று என்பதால் உணர்த்தப்படும் நீங்குதல் என்னுந் தொழிற்குப் 'புக்கென' என்னும் வினையெச்சத்தின் முதல்நிலைத் தொழிலாகிய 'புகுதல்' என்னும் தொழில் காரணம் ஆம். ஆகவே நீங்குதல் காரியம் என்பது சொல்லாதே விளங்கும். விளங்கவே 'அவள்(காளி)தோற்றெனக் கூளிபாடிக் குனிப்பது' என்னும் தொடரில், காளியின் தோல்வி காரணம். கூளிகளின் பாடிக்குனிப்புக் காரியம் என்பது புலப்படும். படவே தோற்றதால் என்று பொருளுரைத்தல் மரபு வழாநிலை என்றுயிற்று. 'தோற்றமை குறித்து' என்னும் (அவர்) பொருள், காரணத்தையும் காரியத்தையும் தெளிய உணர்த்தாது. தோற்றதால் என்றலே பொருளாகும்.

"செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
அவ்வகை யொன்பதும் வினையெஞ்சு கிளவி."

இது தொல்காப்பிய நூற்பா. இதிற் 'செய்தென' என்பதற்கு விளக்கம் எழுதிய சேனாவரையம் நச்சினார்க்கினியம் இரண்டனை யும் நன்குணர்ந்து, இவ்வாறே பனுவல்களில் வரும் ஆட்சிகளை அறிந்து கோடல் அறிஞர்க்கு நலமாம்.

உ

"பானற் கருங்கட் பசுந்தோகை யேமெய்ப் பயன்றுய்ப்பஅத்
தேனக் கலர்கொன்றை சாருப் பியந்தந்த செயல்ஓர்கிலார்
ஊனக்கண் இதுபீளை யொழுகும் புறக்கண் உளக்கண்ணதாம்
ஞானக்கணே ஆதல் நல்கும் பிரான்தில்லை நடராசரே."

பானல் - நீலப்பூ. கருங்கட் பசுந்தோகையே - கரியவாகிய கண்களையுடைய பசியதாகிய தோகைமயில் போலுஞ்சாயலாள் ஆகிய தலைவியே, மெய்ப்பயன் - மெய்யுறுபுணர்ச்சியாகிய பயன்; மெய்மையுடையதாய பயன். (பேரின்பப் பேறு). துய்ப்ப- நுகர. அக் கொன்றை; தேன் நக்கு அலர் கொன்றை. அத் தேன் என்னற்க. கொன்றை சாருப்பியம் தந்த செயலாவது:– பசலை நிறம் அடைதல். நடராசர் (கொன்றை) தந்த செயல் ஓர் கிலார் என்றியைக்க. நடராசர் தரற்பாலதாய சாருப்பி யத்தை அவரது தாராகிய கொன்றையே தந்தளித்தது. சாயுச் சியத்தைத் தம்மை அறியாமல் பிறர் தரல் ஒல்லாது. ஏனைய வற்றை (ச்சாலோகம், சாமீபம், சாருபம் மூன்றனை) அவன் அருளறியக் கொள்ளலாம். அவனறிய வேண்டும் என்ற நியதியில்லை. இது சிறிது வேறுபடும் பெற்றியது. இதனல் வீண் வாதம் புரிய மேற்கோடல் அறிவாகாது. பீளை ஒழுகும் புறக் கண்ணும் ஊனக் கண்ணும் ஆகிய இதுவே. அகக் கண்ணாகிய ஞானக்கண்ணே ஆம்படி மெய்யடியார்க்கு வரம் நல்கியருள வல்லவன் நடராசப்பிரான். புறக்கண்ணையும் அகக் கண்ணாக்க வல்ல நடராசர் தமது கொன்றை சாருப்பியந் தந்த செயலை ஓர்கிலார் ஆதல் என்ன காரணமோ! சாருப்பியம் உற்ற

வர்க்குச் சாயுச்சியத்தை நல்குதல் அடுத்து நிகழ்த்தற் பால தன்றோ? ஓர்ந்தாரேல் அதை நல்கியருள் வாரல்லரோ? நல்கியருளாமையால் ஓர்கிலார் என்றே கொள்ள நேர்கின்றது. ஊனக் கண்ணையும் ஞானக்கண்ணாக்க வல்லபிரான், அக் கண்ணால் அறியலாம் அன்றோ? அறியாதது என்னோ?

செவ்வாய்க் கருங்கட்பைந் தோகைக்கும் வெண்மதிச் சென்னி
ஒவ்வாத் திருவுருஒன்றே யுளதுஅவ் வுருவினைமற்று [யற்கும்
எவ்வாச் சியமென் றெடுத்திசைப் பேமின் னருட்புலியூர்ப்
பைவாய்ப் பொறியர வல்குலெந் தாயென்று பாடுதுமே.

இதற்கு விளக்கம் 54 ஆவது செய்யுளான "அருவருக்கும் உலக வாழ்வு.......ஒருவர் என்று ஓர் இயற்சொல் இலதெனில் யான்மற்று என் சொல்கேனே" என்றதற்கு எழுதிய கட்டுரை யிற் கற்றிருக்கலாம்.

செவ்வாயும் கருங்கண்ணும் உடைய பசுந்தோகைமயில் மேலும் அம்பிகைக்கும் (வெண்டிங்கட் செஞ்சடை முடியுடைய) அப்பனுக்கும் உரு முதலவற்றால் ஒவ்வாத திருவுருவம் ஒன்றே (மாதியலும் பாதியன் என்றபடி) உளது. அத் திருவுருவை ஆணுருவென்றும் பெண்ணுருவென்றும் தனித்துக் கொள்ளல் இயலாது. அதனை எவ்வாச்சியம் என்று எடுத்துச் சொல்வேம். ஈருருவும் கொண்டு திகழும் அவ்வோருருவை ஈருருவத்தையும் இருவேறு முறை சொல்லி, இரு பொருள் கொள்ளுமாறு, 'இன்னருட்புலியூர்ப் பைவாய்ப் பொறியரவல் குலெந்தாய்' என்று பாடுதும். 'இன்னருட்..........பொறியரவு' என்பது இரண்டற்கும் வேறுபடாப் பொருள் தருவதே. 'அல்குல்' என்றது பெண்ணுக்கொரு பொருளும் ஆணுக்கொரு பொருளும் பயக்கும். பண்டைக்காலத்தில் ஒரே பொருள் தந்த சொல் அது. 'எந்தாய்' என்றது அம்மையைக் குறிக்க 'எம்+தாய்' என்றாகும். அப்பனைக் குறிக்க எந்தை என்ற தன் விளியாம். 'தாதாய் மூவேழுலகிற்கும் தாயே' என்பது முதலிய அருண் மொழிகளை நோக்கி 'எம்தாய்' என்றே இருவர்க்கும் உரியதாகக் கொள்ளலும் தகும்.

'தீ' என்பது வாசகம். நெருப்பு என்பது பொருள். தீயென்னும் சொல்லின் கண் நெருப்புருவப் பொருளாற்றல் உளது. உண்மையால், தீ என்னும் சொல்லுக்கு நெருப்பு என்பது ஆற்றற்பொருள் (சக்தியார்த்தம்). வாச்சியார்த்தம் சக்தியார்த்தம் இரண்டும் ஒன்றே. அவ்வாக்கியார்த்தத்தை உணர்த்துவது வாசகம் எனப்படும் சொல் (- பதம்). இப்பாடலில், 'எந்தாய்' என்பது வாசகம். 'இன்னருட்புலியூர்.........எந்தாய்' என்ற தொடர் வாசகம் எனினும் குற்றம் இன்று. அவ்வாசகத்தின் சக்தியார்த்தம் (வாச்சியார்த்தம்) எது? இதை மூன்ருவதடியிற் குறித்தார் ஆசிரியர். அதைத் தொடர்ந்துள்ள வாக்கியம், அவ்வாக்கியார்த்தத்தை இரு பொருள் படக்கூறி இருவருக்கும் உரியதாகக் கொள்ளச் செய்த சிலேடையதாகும். வாச்சியார்த்தத்தை அபிதேயார்த்தம் முக்கியார்த்தம் என்றும் கூறுவதுண்டு.

(தொடரும்)

இர்ாகம் : கேதாரம் — தாளம் : ஆதி

பல்லவி

முருகனடி பணி மனமே
அருள்புரிவான் தயவாய் துதிசெய் (முருக)

அநுபல்லவி

கருணாகரன் கந்தன் புகழ்பாடின்
தருவான் வரமே நிச்சயமே சிவ (முருக)

சரணம்

திருச்செந்தூர் வளரும் திவ்யரூபனும்
தீனசரண்யனே தேவர் துதிசெய்யும்
மருவிடும் வள்ளிலோலன் திருவடி
மறவாமல் என்றும் மனதினில் வைத்து (முருக)

வி. கே. முத்தையா பிள்ளை, பி. ஏ., பி. எல்.,
வண்ணார்பேட்டை, திருநெல்வேலி-3.

நீதிநெறி விளக்கம்

உரைநடையும், ஆங்கில மொழிபெயர்ப்பும்*

பாலகவி வயிநாகரம்,

திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

தேவகோட்டை.

[மலர் 14. இதழ் 8-ன் தொடர்ச்சி]

நல்லா றொழுக்கின் தலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார்—பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்தும் தின்னுவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ்.

பல கோடுகளையுடையனவாய்ச் சிவந்த கண்களைக் கொண்ட ஆண் புலிகள் பெரும் பசி எடுத்தாலும் பசுமையான இடத்தை யுடைய கொல்லைகளிலே உள்ள பயிர்களைத் தின்ன மாட்டாவாம். அதுபோல நல்ல நெறியிலே ஒழுகுகின்ற ஒழுக்கத்தில் தலைநின்றவர்களாகிய பெரியோர்கள் வறுமை அடைந்தார்களாயினும் நல்லன வல்லாத தீயசெயல்களைச் செய்ய ஒரு போதும் இசைய மாட்டார்கள்.

The nature of righteous men

Those who have stood persistently in the path of virtue will never stoop to do evil, even under the clutches of poverty. The many striped and red-eyed tiger, even when suffering under pinching hunger, will not feed on the crop of the green fields (meadows).

Translated by: Sri P. Mutharasu M. A., B. T., Head of the Tamil Department, Sri K. G. S. Arts College, Arulnandi Nagar.

குலம்விற்றுக் கொள்ளும் வெறுக்கையும் வாய்மை
நலம்விற்றுக் கொள்ளும் திருவும்—தவம்விற்றுங்
கூனோம்பும் வாழ்வும் உரிமைவிற் றுண்பதூஉம்
தானோம்பிக் காத்தல் தலை.

தனது குலவொழுக்கம் முழுவதையும் விட்டு விட்டு அதன் வாயிலாகத் தேடிக்கொள்ளுகின்ற செல்வமும் உண்மையாகிய நன்மையை விட்டுவிட்டு அதன் வாயிலாகப் பெறுகின்ற செல்வமும் தவவொழுக்கத்தை விட்டுவிட்டு ஊனுடம்பைப் பாதுகாக்கும் வாழ்க்கையும் தனக்கே உரிமையுடைய மனைவியைப் பிறிதொருவர் வசமாகக் கொடுத்து உண்டு வாழ்வதும் ஆகிய இவை என்றும் தன்பால் வராதபடி விலக்கிப் பாதுகாத்தலே மிகச் சிறந்த அறமாம்.

Wealth to be shunned

The greatest of all virtues is to avoid the riches acquired by the sale of the privileges of one's own lineage, the prosperity flowing from the sacrifice of truth, the gratifying pleasure of the body at the expense of religious austerity and the livelihood earned by disposing of one's own inheritance. 62

இடைதெரிந் தச்சுறுத்து வஞ்சித் தெளியார்
உடைமைகொண் டேமாப்பார் செல்வம்—மடநல்லார்
பொம்மல் முலைபோல் பருத்திடினும் மற்றவர்
நுண்ணிடைபோல் தேய்ந்து விடும்.

பிறர் சோர்ந்திருக்கும் வேளையை அறிந்து அச்சங்காட்டி வஞ்சித்து எளியவர்களது உடைமைகளைக் கவர்ந்து இன்புறுபவர்களுடைய செல்வம் இளமங்கையர்களது பருத்த கொங்கைகளைப்போல மேலும் மேலும் மிகுதியாகி வருமாயினும் அம் மங்கையர்களது நுண்ணிய இடையைப்போல மிகவிரைவிலே குறைந்துவிடும்.

Ill - gotten Wealth

Those who revel in wealth amassed by deceipt and striking terror in the weak will at one time, find, the same diminish like the slender waist of a beautiful maiden, though it may appear as big at first, as her blooming bosom. 63

பெற்ற சிறுகப் பெருத பெரிதுள்ளும்
சிற்றுயிர்க் காக்கம் அரிதம்மா—முற்றும்
வரவர வாய்மடுத்து வல்விராய் மாய
எரிதழல் மாயா திரா.

வலிமை பொருந்திய விறகுகள் சிறிது சிறிதாகக் தன்னிடத்திலே வர வர அவையனைத்தையும் உண்டு எரிந்து கொண்டிருக்கின்ற நெருப்பு அவ்விறகுகள் அழிந்தபிறகு தானும் அழியாமலிருப்பதில்லை. அதுபோலத் தமக்குக் கிடைத்த பொருள்களைச் சிறியனவாகவும் கிடைக்காத பொருள்களைப் பெரியனவாகவும் நினைத்து ஏங்குகின்ற சில் வாழ்நாள் உடைய உயிர்களுக்குச் செல்வத்தாலாகிய பயன் ஒருபோதுமில்லையாம்.

Avarice

How difficult it is for the mortals to prosper, who underrating what they have, make little use of it, think much of what they have not and hanker after it? The wild fire that devours everything in turn as it comes, cannot but die away when all the fuel is consumed. 64

தத்தம் நிலைக்கும் குடிமைக்கும் தப்பாமே
ஒத்த கடப்பாட்டில் தாளுன்றி—எய்த்தும்
அறன்கடையில் செல்லார் பிறன்பொருளும் வெஃகார்
புறங்கடைய தாகும் பொருள்.

ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குரிய நிலைமையிலும் குடிப்பிறப்புக் கேற்ற ஒழுக்கத்திலும் வழுவாமல் பொருந்திய கடமையில் முயற்சிகளை விடாது செய்து சோர்வுற்றுலும் அறத்துக்கு மாருன மறவழியில் செல்லாதவர்களாய்ப் பிறர்பொருளை விரும்பாதவர்களாய் இருப்பவர்களது புறங்கடையில் பொருள் தானே வந்து சேரும்.

Righteous Wealth

Riches will abound at the gates of those, who swerve not from the duties pertaining to their status and lineage, who exert themselves in doing their duty of being universally beneficient to one and all and who inspite of pains and privations, neither transgress the bounds of virtue nor covet their neighbour's wealth. 65

(தொடரும்)

இராகம் : சன்முகப்பிரியா — ஆதி தாளம் லகு 1 வது அட்சர அரையிடத்தி லெடுப்பு

பல்லவி

கலியுக வரதா கார்த்தி கேயா
கருணை புரிவாய் செந்தில் முருகய்யா (கலியுக)

அனுபல்லவி

மால் மருகோனே மாமயில் வாகனனே
வள்ளி மணாளனே வரந்தரும் சீலனே (கலியுக)

சரணம்

நீர்நிலைச் செல்வம் நினது உடைமையெனும்
நினைவினை எனக்கு நல்குவாய் நீயே
பாரினில் யாவர்க்கும் பண்புடன் பணிசெய்து
பக்தியா லுன்புகழ் பாடி மகிழ்ந்திட (கலியுக)

சு. கலியாணசுந்தரம்,
பென்சன் போலீசு மானேசர், பாளையங்கோட்டை.

மாசில் வீணை

கல்வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர்,
வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள்,
அண்ணாமலை நகர்.

'மாசில் வீணை' என்ற பாசுரத்துக்குச் சேக்கிழார் காட்டும் விளக்கம்.

இளவேனிற் காலத்து மாலைநேரம். சந்திர உதயம். மலர்கள் மலர அவற்றில் வண்டினம் ரிங்காரஞ் செய்யும் ஒரு பொய்கைக் கரையில் அதன் நீரருந்தி, குற்றந் தவிர்ந்த வீணு கானங் கேட்டு மகிழ்வது போன்றது நீற்றறை என்பது 'மாசில் வீணை' எனத் தொடங்கும் பாசுரத்தின் கருத்து ஆகும்.

விளக்கம்:

மாசில்வீணை, வண்டறை (வண்டினொலி)—செவியின்பம்.

வண்டறையம் மலருஞ் செவ்வியீன்ற கழுநீர் மணம் — மூக்கின்பம்.

மதியின் நிலவும் தென்றலும்—உடற்கின்பம்.

வீங்கு இளவேனில் ஆகலின் நீர்வேட்கைக்கு நீர் அருந்தல் — வாயின்பம்.

நிலவொளியொடு கூடிய தடாகக் காட்சி — கண்களுக்கு இன்பம்.

இவ்வாறு மெய், வாய், கண், மூக்குச் செவியால் திளைக்கப்படும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்ற மாதிய ஐம்புலனுகர்வுமாக இருந்தது.

விசேடக்குறிப்பு:

மாலையாதலின் அந்நேரத்துக் குவியும் பூவினுக் கருங்கல மாகிய தாமரை யொழித்து அந்நேரத்து மலரும் தண்கழுநீர் (நீலோற்பலமே) கொண்டனர் சேக்கிழார் பெருமான் மரபு வழா மற் காத்தற்கு.

'மாசில்வீணை'—என்ற பாசுரத்துக்கு விளக்கங் காட்டுவார் போன்று,

வெய்யநீற் றறையதுதான் வீங்கிளவே னிற்பருவம்
தைவருதண் தென்றல்அணை தண்கழுநீர்த் தடம்போன்று
மொய்யொளிவெண் நிலவலர்ந்து முரன்றயாழ் ஒலியினதாய்
ஐயர்திரு வடிநீழல் அருளாகிக் குளிர்ந்ததே.

என்றருளினர் சேக்கிழார். (திருநாவுக்கரசு நாயனர் புராணம் செ. 98.)

மாலை நேரத்தில் நீரருந்தல் என்ன இயல்பு? என ஐயுறு வார்க்கு கொடிய இளவேனில் ஆதலில் நீர்வேட்கை உண்டாதல் இயல்பே எனற்கு 'வீங்கு இளவேனில்' என அவ்விருவரும் வற்புறுத்தியருளினமையும் உணரத்தக்கது.

உ

திருச்செந்திலாண்டவன் துணை.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு

★

[புதிய மலிவுப் பதிப்பு — 1961]

புதிய பதிப்பு பிரதி ஒன்றின் விலை ரு. 3–50 ந. பை. ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

(முந்தின பதிப்பு பிரதி ஒன்றின் விலை. ரு. 6/–)

(தபால் கட்டணம் வேறு)

768 பக்கங்கள் கொண்டது. (128 + 621 + 19) உயர்ந்தரக வெள்ளைத்தாளில் பெரிய எழுத்தில் தெளிவாக அச்சிடப் பெற்றது.

டாக்டர். உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் எழுதிய குறிப்புரை, ஆராய்ச்சி, முதலியவற்றுடன் கூடியது.

ஒரே சமயத்தில் 5 பிரதிகளும் அதற்குமேலும் வாங்குபவர்களுக்கும் 20% கழிவு உண்டு.

இதன் விற்பனைத் தொகை ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்தைச் சாரும்.

கிடைக்குமிடம்:–

ஸ்ரீ T. M. குமரகுருபரன் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர்
ஸ்ரீவைகுண்டம் P. O. :: (திருநெல்வேலி மாவட்டம்)

தாயுமானவரின் – பராபரக்கண்ணிகள்

Couplets in venerable adoration of the Omnipotent and Omnipresent

sung by

St. THAYUMANAVAR

2

The Supreme Self is All Pervasive and All-Knowing. He enshrines in the hearts and shines in the thoughts of good who have ardent devotion and purity of heart. He knows what they need and grants even before they ask. This bountiful mercy of the Lord, experienced by the Poet Saint is extolled in this song.

சிந்தித்த எல்லாம்என் சிந்தை அறிந்தே உதவ
வந்த கருணை மழையே! பராபரமே!

(பொ - ரை) (அடியேன்) நினைத்த எல்லா வற்றையும் என் கருத்தறிந்து அருள் செய்யும் பொருட்டு எழுந்தருளி வந்த கருணை மழையே! பராபரமே!

Oh....Lord Supreme! O the Merciful Divine, That shower in plenty and with grace, all I think of even before such thoughts take shape in my mind.

———

(தொடரும்)

Translated by: Sri. K. PALANISAMY, M. A., Lecturer in Tamil, Sri. K. G. S. Arts College, Arulnandi Nagar.

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பர இராமலிங்க சற்குரு புலம்பற்கண்ணி*

தொகுத்தவர், திரு. P. P. துரைசாமி அவர்கள்,
கோயமுத்தூர்.

[மலர் 14. இதழ் 8-ன் தொடர்ச்சி]

பாவகாரி யங்களெலாம் — பாறிடஇப் பாரினிலே
சிவகா ருண்ணியநூல் — செய்தருளும் சற்குருவே. 51

அருயோகம் செய்கற்பட் — டார்சங்கற் பம்போல்
திருநறுங் குன்றத்தவர்க்குத் — தீக்கைசெய்த சற்குருவே. 52

திடஞானம் பெற்றுய்யத் — தீக்கைசெய்த பின்னர்
வடலூரில் வந்திருக்க — வாய்மலர்ந்த சற்குருவே. 53

எத்திசை யுள்ளோரெவரும் — ஏத்துத்தர ஞான
சித்திபுர மென்னும்பேர் — செப்பியருள் சற்குருவே. 54

பார்வதி புரத்தினிலே — பானுசெயுந் தாபமற்றுச்
சீர்வதியு மாரிபெய்யச் — செய்தருளும் சற்குருவே. 55

மேனீர் மையுற்ருேர் — விளங்கு புதுப்பேட்டையினன்
மேனீர் வதியவருள் — வித்தகவென் சற்குருவே. 56

பத்திமைசேர் அந்நகரில் — பல்கூரை பற்றியதீ
வத்திரத்தால் நிற்கச்செய் — மாத்தகைய சற்குருவே. 57

பற்பலபேர் நோய்களைவெண் — பற்பமதால் போக்கியதை
அற்ப னென்ருல்பகரல் — ஆகுமோ சற்குருவே. 58

திருமுகத்தைக் கண்டோர் — திருவருட் பாக்கொண்டோர்
பெருமைபெறுஞ் சீலரென்ற — பேருறச்செய் சற்குருவே. 59


ஞாலமதில் தம்முணரா — நல்குரவால் துன்பமுருச்
சீலமதை மன்பதைக்குச் — செப்பியருள் சற்குருவே. 60

(தொடரும்)

---

*திரு. ச. மு. கந்தசாமி பிள்ளை யவர்கள் இயற்றியது.

29-4-63வ புதுடில்லியில் திருமுறைத் துவக்கவிழா



டில்லி. திருமுறைவாணர் திரு. தண்டபாணி ஓதுவார், பனசைத் திருமுறைவாணர் சட்டையப்ப ஓதுவார் பக்க



திருமுறை வாணர்களுடன் யூனியன் துணை அமைச்சர் திரு. C. R. பட்டாபிராமன் அவர்களும், யூனியன் அமைச்சர் திரு. O. V. அழகேசன் அவர்களும்.

திருஞானசம்பந்தர்

அற்புதத் திருப்பதிகங்கள்

ஆங்கில மொழிபெயர்ப்பு

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

[மலர் 14. இதழ் 8-ன் தொடர்ச்சி]

13. The jains were persecuted and the King embraced Saivism. Then Sri Tirugnana Sambandar took to his pilgrimage. He visited almost all the places where Lord Siva was enshrined. At Tirukkollambudur the river was flooded and he could not get anyone to ferry them across the river. Then Sri Tirugnana Sambandar untied a boat and sat in it along with his followers and began singing the grace of Lord Siva. The boat moved on.

பண் : காந்தாரபஞ்சமம்

"கொட்ட மேகமழும் கொள்ளம் பூதூர்
நட்டம் ஆடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே,"

"We all want to worship you, our God, at Kollambudur; So kindly let the boat cross the river."

14. He travelled towards north and at Tiruvothur a grand welcome was arranged for him. A Saiva devotee, there, approached Sri Tirugnana Sambandar and requested him to turn the male palmyra trees into female ones (fruit bearing ones), as the jains of that town were making fun of him for

having grown such trees. Sri Tirugnana Sambandar prayed to Lord Siva and the trees began bearing fruits then and there itself.

பண் : பழந்தக்க ராகம்.

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஓத்தூர் மேய வொளிமழுவாள் அங்கைக்
கூத்தீர் உம்ம குணங்களே."

"O, the primordial Dancer dwelling at Tiruvothur! There is none who does not worship you with selected flowers."

15. Then on his way up the pilgrim poet went to Mylapore (Madras) and worshipped Sri Kapaleeswara. There lived a rich merchant whose virgin daughter, by name Poompavai died of snake-bite, while plucking flowers for the puja. He preserved the bones of the girl, in an earthen pitcher. When he came to know of Sri Tirugnana Sambandar's arrival at Mylapore, he took the pitcher to the latter. Sri Tirugnana Sambandar went to the temple and prayed to Lord Siva and at the end of the padigam Poompavai came out of the pitcher alive with full growth.

பண் : *சீகாமரம்.*

"மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்."

"Lord Siva dwells in the temple of Kapaleeswaram, at Mylapore, surrounded by garden. His devotees are fed daily. O, Poompavai, will you go away without looking at this grand sight and participating in it."

16. Sri Tirugnana Sambandar returned to his native place, Sirkali. All his relatives requested him to get married. Sri Tirugnana Sambander considered this also as an order of God and so agreed to it. His marriage took place with the daughter of Nambandar Nambi, on an auspicious day, at Achalpuram. Then he took all those who assembled at the marriage along with the bride to the Siva temple. There he prayed to Lord Siva and by His grace there appeared a miraculous fire. Sri Tirugnana Sambandar asked everyone to enter into that celestial fire and finally he too did the same with his bride and enjoyed the Eternal Bliss.

Achalpuram is also known as Nallurpperumanam.

பண் : அந்தாளிக் குறிஞ்சி.

"கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேயநம் பானே."

"O, my Lord of Nallurpperumanam! you wear the garland of poems sung by your devotees. I have never wanted a marriage laden with rituals. I have been singing at your shrines against this. Have they all proved false?"

"திருச்சுழியல்"

தேவாரமணி

திரு. சட்டையப்பன் அவர்கள்.

பழம் பதியாம் பாண்டிய நாட்டுப் பாடல் பெற்ற பதி பதினுன்கிலே பன்னிரண்டாவது பதியாக விளங்குவது 'திருச்சுழியல்.'

இத்தலம், வாழி திருநாவலூர் வன்றொண்டராம் சுந்தர மூர்த்தி சுவாமிகளின் பாடல் பெற்றது.

"ஊனய் உயிர்ப்புகலாய்"

என்பது அந்த நட்டராகப் பண்ணின் துவக்கம்.

சேர வேந்தனும் (சேரமான்பெருமாள்) சுந்தரரும்திருச் சுழியலமர்ந்த சிவனை வழிபட்டுத் தங்குகின்றனர். அன்றிரவு சுந்தரர்கனவிலே 'காளை' வடிவு கொண்டு கையிலே பொற் செண்டும், முடியிலேசுழியமும் உடையராய் இறைவன் தோன்றினர். அப்படித் தோன்றியவர்,

"யாம் இருப்பது கானப்பேர்."

என்று கூறிமறைகின்றார்.

இதைப்பின் வரும்பாடலால் சேக்கிழார் பெருமான் கூறு கின்றார்;

"அங்கணரைப் பணிந்துறையும் ஆரூரர்க் கவ்வூரில்
கங்குலிடைக் கனவின்கட் காளையாம் திருவடிவால்
செங்கையினிற் பொற்செண்டுந் திருமுடியிற் சுழியமுடன்
எங்குமிலாத் திருவேடம் என்புருக முன்காட்டி".

"கானப்பேர் யாம் இருப்ப தெனக்கழறி................"

இறைவன் மறைவைக் கண்ட சுந்தரர் சேரர்க்கு அதைக் கூறுகின்றார். இருவரும் சுழியற் பெருமானை வணங்கிப்புறப் படுகின்றனர் கானப்பேரண்ணலைக்காண. பின் ஆங்கு (கானப் பேரில், "தொண்டரடித் தொழலும்"என்னும் பதிகம் பாடுகின்றார் சுந்தரர்.

திருச்சுழியல் இறைவனை வணங்குவார்க்கு என்ன பலன் கிடைக்கும் என்று கேட்டால் அதற்கு விடையளிப்பார் சுந்தரர்.

"கவ்வைக்கடல் கதறிக்கொணர் முத்தங்கரைக் கேற்றக்
கொவ்வைத்துவர் வாயார்குடைந் தாடுந்திருச் சுழியல்
தெய்வத்தினை வழிபாடுசெய் தெழுவார்அடி தொழுவார்
அவ்வத்திசைக் கரசாகுவர் அலராள்பிரி யாளே.

என்ற அவர் அருந்தமிழ்ப் பாடல் அறிந்து இன்புறற்பாலது.

திருக்கோவிலுக் கெதிரேயுள்ள தீர்த்தத்தைக் 'கவ்வைக் கடல்' என்று குறிக்கின்றார் சுந்தரர். சதானந்த முனிவர் முதலியோர் வழிபட்ட தலமாம் இப்பதியில் உமையம்மையார் சிவபெருமானை வேண்டித் தவம் செய்திருக்கிறார்.

எதற்காக?'தம்மைத் திருமணம் செய்து கொள்ளவேண்டும்' என்பதற்காக!

வேதங்களை அருளிச் செய்த சிவபெருமான் 'வேதன்' என்னும் பெயரால் சான்றோரால் அழைக்கப் படுகின்றான். 'வேதியா! வேதகீதா!' என்பார் நாவரசர். பொங்கழல் உருவனும் சிவபெருமானை 'நால்வேதமும் பொருள்களும் அருளி' எனப் போற்றி 'அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த' அற்புதத்தை ஆலவாய்ப் பதிகமதில் அன்பொழுகப்பாடுவார் ஞானசம்பந்தர்.

வெறும் வேதங்களைமட்டும் அவன் அருளவில்லை. அதற் குரிய விதியை (விளக்கங்களை)யும் நமக்களித்துள்ளான்.

வேதங்களிலே மக்களுக்குத் திருமணத்தினை விதித்தருளிய சிவபெருமான் தானும் திருமணம் செய்து கொண்டு வழிகாட்டி யருள்கின்றான்.

தென்பால் உகந்தாடுந் தில்லைச் சிற்றம்பலவனைப் 'பெரும் பித்தன்' என்கிறார் மாணிக்கவாசகர். ஏன்? அவன் பெண்பால் உகந்தானே, அதை வைத்து!

மற்றும், மலையரையன் பொற்பாவையாம் பார்வதியை உலகறிய மணந்த சிவபெருமானை எல்லோர்க்கும் அறிமுகம் செய்துவைக்கிறார் மணிவாசகர்.

"............வியனுலகம் வாழச்
செவ்வண்ணப் பெருமானார் மணவினையில்
திருவுள்ளம் பற்றினரால்"

என்பது காஞ்சிப் புராணம். உயிர்களாகிய நாம் மணஞ்செய்து கொண்டு சுத்த போகத்தை அனுபவிக்கச் சிவபெருமான் அம்மையை மணம் புரிந்து காட்டுகின்றான்.

காஞ்சியில் காமாட்சியம்மை திருமணம்; மதுரையிலே மீனாட்சியம்மை திருமணம். இவைபோன்ற திருக்கல்யாணத் திருவிழாக்கள் தலங்கள் தோறும் நடக்கின்றன. உத்சவம் என்பதன் பொருள் உயர்ந்த சிருஷ்டி என்பதாம். அதைத் தமிழில் சிறப்பென்பர். சிறப்பு என்பதற்குப் பொருள் 'விழவு' என்று வழங்கினார் பரிமேலழகர்.

மலைமகளாகிய பார்வதியம்மை சிவபெருமானைக் குறித்துத் 'தவசு' (தவம்) செய்து சிவபெருமானை மணந்து கொண்டதாக ஒரு ஐதீகம். இந்த ஐதீகம் 'தவசு விழா'வாக ஆண்டுதோறும் ஆடி மாதத்தில் 'திருச்சுழியல்' தலத்தில் நிகழ்கின்றது. இது பத்துநாட்கள் திருவிழாவாகும். பல அன்பர்கள் கண்டுகளிக்கின்றனர்—திருமேனிநாதர், துணைமாலை நாயகியின் திருவருளைப் பெறுகின்றனர்.

திருச்சுழியலில் அம்மை தவசுசெய்து அரனை மணக்கும் அந்த அற்புத நிகழ்ச்சியை,

"............மலைமகளை
விரதயோக நெறிநின்று மணந்தார் சுழியல் வியனகர்"

என்ற திருவிளையாடற் புராண அருச்சனைப் படலத்திலே பாடுகின்றார் பரஞ்சோதி முனிவர்.

அந்தத் தவசு விழாவிலே குண்டாறு தவசு மண்டபத்திலே தவக்கோலத்திலே துணைமாலையம்மை வீற்றிருக்க அன்றுமாலை திருமேனிநாதர் இடபவாகனத்தில் எழுந்தருளிக் காட்சி கொடுத் தருளும் காட்சியைக் காணக்காண இனிக்கும்–இன்பம் துள்ளும். எண்ணிலா அடியவர் கூட்டம். இரவு வீதிஉலா! துணைமாலை யம்மை சமேத ஸ்ரீ திருமேனிநாத சுவாமி இருந்தருளும் கோலத்தைக் காண்போர் கூடலில் கல்யாண சுந்தரரைக் கண்டாற் போலவே இருக்கும் என்று நான் எண்ணுகின்றேன்.

"பண்ணும் இன்னிசையும் நீரும் தன்மையும் பாலும் பாலின்
நண்ணும் இன்சுவையும் பூவும் நாற்றமும் மணியும் அங்கேழ்
வண்ணமும் வேறு வேறு வடிவுகொண் டிருந்தால் ஒத்தது,
அண்ணலும் உலகம் ஈன்ற அம்மையும் இருந்த தம்மா."—

இந்தப் பரஞ்சோதி முனிவர் பாடிய திருமணப் பாடலே அதற்குத் துணையாக வைக்கின்றேன்.

இவ்வளவு பெருமையுடைய திருச்சுழியில் விருதுநகருக்குக் கிழக்கே 19 மைலில் இருக்கிறது. இடையில் பதினோராவது மைலில் அருப்புக்கோட்டை. இத்தலம் (திருச்சுழியல்) இராம நாதபுரம் சமஸ்தானத்தின் பரிபாலனத்தைச் சார்ந்ததாகும்.

முற்றும்.

திருவருட் பயன் – தெளிவுரை

பண்டித வித்துவான் சைவப் புலவர் சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்,

(மலர் 14. இதழ் 8-ன் தொடர்ச்சி)

16. "ஒளியும் இருளும் உலகும் அலர்கண்
தெளிவில் எனில்என் செய."

(தெ – ரை) விளக்கத்தைத் தரும் ஞாயிறு, திங்கள், நெருப்பு ஆகிய ஒளிப்பொருள்களும்; மயக்கத்தைத் தரும் இருளும் உலகமும் விழித்திருக்கும் கண்ணிற்குக் காணும் தன்மை இல்லையாயின் என்ன பயனைச் செய்ய வல்லன? ஒரு பயனையும் செய்யா என்பதாம்.

இப்பாடல் ஒட்டணியின்பாற்படும். கவிஞன் தான் கருதிய பொருளை மறைத்துக் கொண்டு, அதற்கு ஒத்த பொருளைச் சொல்லுவானாகில் அது ஒட்டணி என்று கூறப்படும். இங்கு ஆசிரியர் கருதிய பொருள், ஒளியாம் சிவமும், இருளாம் மலமும், உலகமாம் மாயையும் விளங்க இருப்பினும்; உயிர்களிடத்து உணர்வில்லையாயின் அவற்றை அறிய இயலாது என்பதாகும். இக்கருத்தினை மனத்துட்கொண்டே ஆசிரியர், கண்ணின்பாற் தெளிவில்லையாயின் ஒளியும், இருளும், உலகும் இருந்து என் செய எனப்பிறிது மொழிதலாகக் கூறினர்.

என்செய என்ற வினா ஈண்டு ஒருபயனையும் பெற முடியாது என இன்மை குறித்து நின்றது; "கற்றதனாலாய பயன் என்கொல்" என்புழிப்போல.

17. "சத்(து)அசத்தைச் சாரா(து) அசத்(து)அறியா(து)
உய்த்தல்சத சத்தாம் உயிர்."

[அங்கண் இவை

(தெ - ரை) நிலைபேறுடைய சிவத்தின்முன் நிலையில் பொருளாகிய உலகியற் பொருள்கள் முனைத்து விளங்காவாம். அந்நிலையில் பொருள்களும் அறிவற்றன வாதலின், நிலையுடைய சிவத்தை அறியாவாம். அங்ஙனம் இருத்தலின் இந்நிலையுடைய பொருளாகிய சிவத்தையும், நிலையற்ற பொருளாகிய உலகியற் பொருள்களையும் சார்ந்ததின் வண்ணமாய் நின்று உணருந் தன்மை உயிர்களுக்கே உண்டு என்பதாம். 'இங்ஙனம் உயிர் சத்தோடு கூடிச் சத்தாயும், அசத்தொடு கூடி அசத்தாயும் நிற்றல் பற்றி அது சதசத்து எனப்பட்டது.

சத்து-உள்பொருள்; நிலையுடைய பொருள். அசத்து-நிலை யற்ற பொருள்.

"யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்
சத்தே அறியாது அசத்திலது அறியாது
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா."

என்னும் சிவஞான போதச் சூத்திரமும் இக்கருத்தினையே விளக்கி நிற்றல் காண்க.

18. "இருளில் இருளாகி எல்லிடத்தில் எல்லாம்
பொருள்கள் இலதோ புவி."

(தெ - ரை) இருள் வந்த காலத்து இருளாகியும், ஒளி வந்தபோது ஒளிவிட்டு விளங்கியும் நிற்கும் பொருள்கள் இவ் வுலகின்கண் உளவன்றோ? உள என்பதாம்.

இதுவும் ஒட்டணியின்பாற்படும். இருளில் இருளாகியும், ஒளியில் ஒளிவிட்டும் விளங்கும் பொருள்கள் கண்ணாடி, கண், படிகம் முதலியனவாம். ஆசிரியர் வெளிப்படையாகக் கூறும் பொருள் இதுவேனும், உள்ளத்தடக்கிய பொருள் பிறிதாகும். உயிர் இருளாகிய ஆணவத்தோடு சேரும் பொழுது அறியாமை யோடு கூடியும், ஒளியாகிய திருவருளோடு சேரும் பொழுது மெய்யறிவு பெற்று இன்புற்றும் இயங்கும் இயல்பினது; இங் ஙனம் தாம் கருதிய பொருளைத் தொகுத்து அதற்கு ஒத்த பொருளை இப்பாடலில் கூறியிருத்தலின் இது ஒட்டணியாயிற்று. மேலைய குறளில் உயிர் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் எனக் கூறிய ஆசிரியர் இக்குறள் வெண்பாவால் கண்ணாடி, கண் போன்ற பொருள்களால் உவமை காட்டி விளக்கியுள்ளார்.

"ஆணவத்தோடு அத்துவிதமானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினேடு அத்துவித மாகுநாள் எந்நாளோ"

எனத் தாயுமானரும் கூறுதல் காண்க.

எல்+இடத்தில், எல்+ஆம் எனப் பிரித்துப் பொருள் காண்க. எல்—ஒளி "எல்லே இலக்கம்" என்னும் தொல்காப்பியமும் காண்க. இலதோ என்பதிலுள்ள ஓகாரம் எதிர்மறைப் பொருள்பட வந்தது.

19. "ஊமன்கண் போல ஒளியும் மிகஇருளே
†வாமன்கண் காணு தவை."

(தெ – ரை) கூகையின் கண்ணுக்கு அதனது தசைத் திரளது அமைப்பால் சூரியஒளி தெரியாதது போல, உயிர்களுக்கும் இறைவனது திருவருளால் ஞானம் கைவரப்பெருதபொழுது ஆணவமல மறைப்பால் பேரொளிப் பிழம்பாக விளங்கும் இறையொளியையும் காணமுடியாது என்பதாம்.

ஊமன் – கூகை. வாமன் – சிவபெருமான். காணுதவை – காணுத உயிர்கள். யாமன் கண் என்ற பாடத்திற்கு "ஒளியும் மிக இருளேயாம்" எனக் கூட்டி "மன்கண் காணுதவை" எனப் பிரித்துப் பொருள் காண்க.

20. "அன்றளவும் ஆற்றுமுயிர் அந்தோ! அருள்தெரிவ(து)
என்(று)அள(வு)ஒன்(று) இல்லா இடர்."

(தெ – ரை) அநாதியாகவே பிறந்திறந்து அளவில்லாத துன்பங்களைத் தாங்கி நிற்கும் உயிர்கள் அந்தோ! ஆணவம் நீங்கித் திருவருள் இன்பத்தில் திளைப்பது எக்காலம்?

இதுகாறும் உயிர்களின் இயல்பை விளக்கி வந்த ஆசிரியர், அவை இத்தகைய துன்பத்தினின்றும் நீங்கி இன்புறுவது எக்காலம் என இரக்கத்தால் இக்குறளை அருளிச் செய்கின்ருர். எனவே உயிர்கள் பிறவிப் பெருங்கடல் நீந்தி இறைவனடி சேர வேண்டும் என்பது கருத்தாயிற்று.

அளவொன்றில்லா இடர் அன்றளவும் ஆற்றுமுயிர் அந்தோ அருள் தெரிவது என்று! எனக்கூட்டிப் பொருள் காண்க.

(தொடரும்)

† யாமன் என்பதும் பாடம்.

கலிங்க நகரம்

திரு. தி. நா. ராமசந்திரன் அவர்கள்.

புராண வரலாற்றில் சீரும்சிறப்புடன் திகழ்ந்து வந்த நகரங்களில், கலிங்க நகரம் மிகத் தொன்மையானதாகும். துவாபரயுகத்தில் கண்ணனுக்கு உறவினனுயினும், பகைமை கொண்டு இடையூறுகளே செய்து வந்த சிசுபாலன் என்னும் சேதி வம்சத்தைச் சார்ந்த அரசன் ஆண்டு வந்த நகரமும் இதுவே. இந்த சிசுபாலனே வைகுண்டம் பார்க்க வந்த சனந் தனுதிகள் சாபத்திற்குட்பட்ட வைகுண்ட வாசிகளும், திரு மாலின் துவார பாலகர்களுமான செய–விசயர்களில் ஒருவ னுவான். தனது அத்தை குந்திக்குக் கொடுத்த வாக்குப்படி கண்ணன் சிசுபாலனின் நூறு பிழைகளைப் பொறுத்தது மல்லாமல் அவ்வெண்ணிக்கைக்கு மேற்பட்ட மூர்க்கத்தனங் கொண்ட சிசுபாலனின் பொறுக்க முடியாத பிழையினுல், தன் சக்கிராயுதத்தைக் கொண்டு சிசுபாலனின் உயிரை மாய்த்தான் என்பது மகாபாரதத்தின் கூற்று. இக்கதை யாரும் அறிந்ததே. அவன் சேதி வம்சத்தைச் சார்ந்தவன் என்பதும் அனைவரும் அறிந்த உண்மை. ஆயினும் அவன் ஆட்சிக்கு உட்பட்ட சேதி நாட்டிற்கு தலைநகரம் எது என்பது நாம் அறியாத ஒன்று. புதை பொருள் ஆராய்ச்சியின் வாயிலாக அது, ஒரிசா மாகாணத்தில் இப்பொழுது புவனேசுவரம் என்று சொல்லப் படும் பட்டணத்திற்கு மிகவும் அருகாமையிலுள்ள "சிசுபால கிருகம்" என்று இப்பொழுதும் வழங்கப்பட்டு வரும் கோட்டை யாகும் என்று கொள்ளலாம்.

'வானெலி' இதழில் வெளிவந்துள்ள இக்கட்டுரை ஆசிரியர் அனுமதி யுடன் வெளியிடப் பெறுகின்றது.

சிசுபால கிருகத்திற்கு ஆறுமைல் வடமேற்கே கண்டகிரி, உதயகிரி என்று இப்பொழுது வழங்கப்படும் சைன சமயத்தைச் சார்ந்த குன்றுகளிருக்கின்றன. அப்படியே சிசுபால கிருகத்திற்கு மூன்று மைல் தெற்கே, தற்காலம் "தௌலிக் குன்றுகள்" என்று வழங்கப்படும் அசோக சாசன பாறைகளே மிகவும் தொன்மையான தோசலி என்னும் சிறு நகரமாகும். சிசுபால கிருகத்திற்கு இரண்டு மைல் மேற்கேதான் கி. பி. 10-ம் நூற்றுண்டில் நிர்மாணிக்கப்பட்ட லிங்கராசம் எனப்படும் சிவன் கோவிலுள்ளது. இந்த லிங்கராசக் கோயிலைச் சுற்றியே சைவ மதத்தைச் சார்ந்த 500க்கும் மேல் எண்ணிக்கை கொண்ட கோயில்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. தற்காலம் ஒரிசா மகாணத்தினுள் தலை சிறந்த நகரமாகவும் அதன் தலைநகரமாகவும் உள்ளது புவனேசுவரம். இப்புவனேசுவரத்திலுள்ள கணக்கற்ற கோயில்களில் தலை சிறந்தது இந்த லிங்கராச கோயிலாகும். தென் கிழக்கே அசோக சாசனங்கள் பொறிக்கப்பட்ட தௌலி மலைகளில், பௌத்த சமயமும், கிழக்கே கண்டகிரி-உதயகிரி மலைகளில் சைனமதமும் நடுவே சைவ, வைணவ, காணபத்திய சமயங்களும் செழித்துக் கலிங்க நகரத்தை மூன்று பாகங்களாகப் பிரித்த தெனலாம். ஆகையால் புவனேசுவரத்தின் சரித்திர வரலாறு புராண காலமென்ன (1000 கி. மு.) புத்தர் காலமென்ன (550 கி. மு.) அசோகர் காலமென்ன (250 கி. மு) கலிங்க அரசர்களான க்ாரவேலன், குதேபசரி, வடுகர் முதலியவர்கள் காலமென்ன (150–50 கி.மு.) குசானர்கள் காலமென்ன (200 கி. பி.) சேகரி அரசர்கள் காலமென்ன (900–1000 கி.பி.) என இவ்விதம் பல்வேறு ஆட்சி முறைகளினுல் கி. மு. 1000 முதல் கி. பி. 1600 வரை பின்னப்பட்டிருக்கிறது என்று நமக்கு ஆராய்ச்சினுல் தெரிய வந்துள்ளது.

இவ்வித ஆராய்ச்சிக்கு குகைக் கோயில்கள், கோயில் கட்டிடங்கள், கோட்டை கொத்தளங்கள், சிலா சாசனங்கள், கல் சிற்பங்கள், நாணயங்கள் ஆகியவை முக்கிய ஆதாரமாகும். 1948–50 வரை செய்த புதைபொருள் ஆராய்ச்சியினுல், சிசுபால கிருகம் என்னும் கி. மு. 3-ம் நூற்றுண்டைச் சார்ந்த சதுரமான

கோட்டை வெளி வரலாயிற்று. இக்கோட்டைக்கு வெளிப் பிராகாரங்கள் ஒவ்வொன்றும் முக்கால் மைல் நீளங்கொண்டது. உள்ளடக்கமான பூமி அரைமைல் சதுரம், கோணங்களில் கொத்தளங்களும், ஒவ்வொரு பக்கத்திற்கும் இரண்டென எட்டு வாயில்களும் இக்கோட்டைக்கு அமைந்துள்ளது. இக்கோட்டையின் அணியணியான தெருக்களின் பாகுபாடு மிகவும் மெச்சத் தக்கது. இக் கோட்டையினுள் அரசனுடைய மாளிகைகளும் அதைச் சார்ந்த விடுதிகளும் இருந்தன. மக்கள் பெரும்பாலும் கோட்டையின் வெளியேதான் வாழ்ந்தார்கள் என்பது ஆராய்ச்சியின் விளைவாகக் கிடைத்த மட்பாண்டங்களினுல் தெரிய வருகிறது. கோட்டையைச் சுற்றி கந்தவதி என்னும் சிற்ருறு பெருகுகின்றது. கோட்டையைக் கட்டும் பொழுதே இச்சிற்ருற்றைக் கோட்டையைச் சார்ந்த அகழியெனக் கொண்டார்கள்போலும்.

இக்கோட்டைக்கு வடமேற்கே, ஆறுமைலுக்கு அப்பால் கண்டகிரி–உதயகிரி குன்றுகள் நிற்கின்றன. இக் குன்றுகளில் 65 குகைக் கோயில்களுக்கு மேல் சைன சமண துறவிகளுக்காகச் செய்யப்பட்டுள்ளன. உதயகிரி என்பது அங்குள்ள கல்வெட்டு சாசனத்தில், 'குமாரி கிரி'என்றுபெயர் பெற்றுள்ளது. இங்குள்ள குகைக்கோயில்களில் சில 24-ஆவது தீர்த்தங்கரரான மகாவீரர் காலத்தைச் சார்ந்தவை. இவை சைன அருகத்துகள் வாழ்ந்த இடம். இங்குள்ள அதிகும்பா என்னும் குகையில் கி. மு. 2ம் நூற்ருண்டைச் சார்ந்த சேதி வம்சத்தினனுன கலிங்க அரசன், காரவேலனின் கல்வெட்டு ஒன்று பொறிக்கப்பட்டிருக்கிறது. இச்சாசனத்தில் அரசனின் ஆட்சியில் நடந்த முக்கியமான செய்திகள் வருட வாரியாகக் காணப்படுகின்றன. சுருக்கமாக அவையாவன: (1) காரவேல மன்னன் அரியணையேறிய முதல் வருடத்தில், புயலால் பாழடைந்த கலிங்கத்தின் தலைநகரைச் சீர்திருத்தினன். (2) தனது ஆட்சியில் ஐந்தாவது வருடத்தில் தலை நகருக்குள், தனசுலியாவாடா என்னும் சிற்ருற்றை வெட்டி உள்ளே கொணர்ந்தான். இதுவே தற்காலம் கோட்டையைச் சூழ்ந்துள்ள கந்தவதி என்னும் அகழியாகும்.

(3) தனது ஆட்சியில் ஒன்பதாவது ஆண்டில் இவ்வரசன் 38 லட்சம் வெள்ளி நாணயங்கள் செலவழித்து ஒரு பெரிய மாளி

கையைக் கட்டினான். 'மகா விசயம்' என்று அதற்குப் பெயரிட்டான். அப்படியே 'கல்பதரு பூசை' என்னும் விழாவைக் கொண்டாடிக் கேட்டவர்களுக்கு இல்லை எனாதபடி வேண்டிய பொருளை அளித்து, தன் புகழை நிலை நாட்டினான்.

(4) தன் ஆட்சியின் 12வது வருடத்தில் மகத தேசத்தின் மீது படை யெடுத்து, அதன் தலை நகரைச் சூறையாடி மகத மன்னர்களான நந்தர்களில் ஒருவனால் முன்னொருகாலம் கலிங்க தேசத்திலிருந்து வெளி நீக்கப்பட்ட, கலிங்கசின படிமத்தைக் கைப்பற்றி கலிங்க நகரம் கொண்டு வந்து தக்க சிறப்புடன் கோயில் வைத்தான்.

(5) தனது ஆட்சியில் 13வது வருடத்தில், எங்கும் வெற்றிக் கொடி நாட்டிய திருப்தியுடன் அவ்வரசன் தன் மனதை மத உண்மைகளில் செலுத்தினான். செயின தத்துவங்களில், அதிலும் முக்கியமாக, சிவதேக சங்காதத்தில் மிகவும் ஊக்கம் கொண்டு தவக்கோலம் கொண்டான்.

(6) 75 லட்சம் ரூபாய்கள் செலவில் துறவு பூண்ட தனது பட்ட மகிஷிக்கு குமாரிக் குன்றில் தகுந்த தங்குமிடம் கட்டினான்.

(7) மக்கள் அன்புக்கு உறைவிடைமானதால், இவ்வரசனை "பிக்கு அரசன். தர்ம அரசன், சாந்தி புருடன், செழுமைத் தெய்வம், மாளிகை, கோட்டை, அரசு இவைகளின் நிர்மாதா" எனப் பலவாறாக மக்கள் புகழ்ந்தார்கள்.

காரவேலருடைய சாசனம். தௌலியிலுள்ள அசோக சாசனங்களைப் போலவே, தௌலிக்கு 6, 7 மைல் அருகாமையிலேயே காணப்படுவதில், ஒரு மர்மம் உள்ளது. உதயகிரியைச் சுற்றி கி. மு. 3ம் நூற்றாண்டிலேயே மக்களின் வளர்ச்சியைப் பற்றிய வரலாற்றை இக்குகை சாசனங்களினால் நாம் அறியலானோம். தௌலி மலையில் உள்ள சாசனம் கலிங்கம் வென்ற அசோகனின் புகழ் பாடுவதைப்போலவே இங்கு கலிங்க மன்னனான காரவேலனின் சாசனம் காரவேலன் புகழைப்பாடுவதாக அமைந்துள்ளது. "ஐயா, கலிங்கம் கொண்ட அசோகன் லட்சம் மக்களைக் கொன்றான்! லட்சத்து ஐயாயிரம் மக்களை

அடிமையாக்கினுன்; பிணி, பசி, துன்பம் இவைகளுக்கு இரை யாக்கினுன். இதுவா புத்த பிரானின் தர்மமாகும்? நமது சீவ அகிம்சா மார்க்கத்திற்கு முரணுயிற்றே. அவ்வழி மக்கள் செல்லக் கூடாதே. அசோக மன்னனே அவ்வழியினின்று மாறி ஞன். அசோக ஆட்சிக்கு நூறு ஆண்டுகள் பின்னே கலிங்கம் மறுபடியும் கலிங்கர் வசமே வந்து சேர்ந்தது. காரவேலன் இரு தரம் திக்விசயம்செய்து பாடலிபுத்திரத்தை சூறையாடிக் கலிங்க சின மூர்த்தியைக் கைப்பற்றித் தன் நகரம் சேர்த்தான். மறு படியும் சினதர்மம் தலையெடுத்தது''எனமக்களுக்குப் போதிக்கும் முறையிலே அதிகும்ப சாசனம் அமைந்துள்ளது. அதன் காலம் கி. மு. 2ம் நூற்ருண்டு என்கிருேம். ஏனைய வரலாற்றுடன் நம் கவனத்தைக் கவருவது கீழ் வருமாறு:

(1) மகதமும் கலிங்கமும் நெடுங் காலமாகவே இரு போரிடும் ஆட்சிகள்.

(2) அசோகன் கலிங்கம் கவரும் முன், கலிங்கத்தின் மதம் சைனமே.

(3) கலிங்க, மகதப் போரில் முதலாவதாக நந்தர்கள் கலிங் கத்தை வென்ருர்கள். கலிங்க நகரத்தில் வணங்கப்பட்டு வந்த கலிங்க சினமூர்த்தியை நந்தர்களில் ஒருவர் கைப்பற்றி பாடலீ புத்திரம் கொண்டு சென்ருர்.

(4) மறுபடியும் கலிங்கம் நந்தர்களின் ஆட்சியிலிருந்து விடுபட்டுச் செழுமை கண்டபொழுது, மௌரிய சக்கரவர்த்தி யான அசோகன் கலிங்கத்தின் திமிரை அடக்கும் வகையில் மிகுந்த சேதத்துடன் கலிங்கத்தை வென்ருன்.

(5) சேதி வம்சத்தைச் சார்ந்த காரவேலன் என்ற கலிங்க மன்னன் கி. மு. 2ம் நூற்ருண்டிலே பழிக்குப்பழி வாங்கும் நோக்கத்துடன் போர்க் கோலம் பூண்டு, மௌரியர்களுடன் தீவிரமாகச் சண்டை செய்தானெனவும் அவர்களுக்குப் பின்வந்த மகத அரசரை வென்று கலிங்கசின பிரதிமையைக் கைப்பற்றி, ஊர்வலமாகக் கொணர்ந்து மறுபடியும் கலிங்க நகரத்தில் பிரதிட்டை செய்தான் என்பதுவுமே இக்கலிங்க நகரத்தின் பொற்கால நிகழ்ச்சிகளைக் குறிக்கும். கண்டகிரி-உதயகிரி

குகைக் கோயில்களிலுள்ள சிறப்போ, சாகுந்தலம், உதயணன் கதை முதலிய பழைய கதைகளை ஆதாரமாய்க் கொண்ட சிற்ப அழகையும், அக் காலத்திய கலிங்க மக்களின் சீவித சரித்திரம், நடையுடை பாவனைகள் இவைகளையும் தெள்ளென நமக்குத் தெரிவிக்கும் அழியாச் சிற்பமாகத் திகழ்கிறது.

கண்டகிரிக்கு ஆறுமைல் வட கிழக்கேயுள்ள தௌலீ என்னும் பௌத்த மலைச்சாரலைக் கவனிப்போம். இதற்கே தோசலீ என்று பழைய பெயர். அசோகனின் சாசனங்கள் பாறையில் அரைபாதி வெளிவந்த யானைச் சிற்பத்திற்கு பக்கத்தில் பொறிக்கப்பட்டன. அசோகன் கலிங்கம் வென்ற சோகத்தை அச் சாசனங்களின் மூலம் தெரிவிக்கின்றான். அங்குள்ள மகா மாத்திரர்களுக்கும், மக்களுக்கும், தன் பிரதி நிதிக்கும் அவை ஏற்படுத்தப்பட்ட சாசனங்கள் எனக்கூறுகின்றான். அசோகன் காலத்தில் தோசலீயும், சிசுபால கிருகத்தைச் சேர்ந்திருந்தது. சிசுபாலகிருகம் கலிங்க நகரத்தின் உள்ளடங்கியது.

சிசுபால கிருகத்திற்கு 1½ மைல் கிழக்கே புவனேசுவரம் எனக் கூறினேம். இப்புவனேசுவரமே தற்காலம் ஒரிசா மாகாணத்தின் தலைநகரமாகவும் வெகுநாட்களாகவே ஒரு பெருமை வாய்ந்த புண்ணியத் தலமாகவும் விளங்குகிறது. அதன் வியக்கத் தக்க வரலாற்றில், இரண்டொன்றை நாம் இப்பொழுது கவனிப்போம். லிங்கராசமுள்பட 500 கோயில்களுள்ள புவனேசுவரம் ஒரு கோயில் நகரமெனவே வழங்கப்பட்டு வருகிறது. கலிங்கத்துக் கோயில்கள் 3 வகையாவன. 750–900 கி. பி. வரை நிர்மாணிக்கப்பட்ட........ பழமையானவை ஒரு வகை. 900 முதல் 1000 கி. பி. வரை எழுப்பிய நடுவகை என இரண்டாவது. 1100 கி. பி. முதல் 1250 கி. பி. வரை நிறுவப்பட்ட பிற்காலத்தியவை என மூன்றுவது வகையுமாகும். நடுவகையைச் சார்ந்தவை மிகவும் பிரும்மாண்டமாக விளங்கும் புவனேசுவரத்திலுள்ள லிங்க ராசமும், பூரியிலுள்ள ஜகன்னாதரின் கோயிலும், மிகவும் உன்னதமான லிங்க ராசமுமே கலிங்கத்துக் கோயில் கட்டட சிற்ப சாரத்தின் சாரமாகும். சரித்திரர்கள் இக்கோயில் யயாதிகேசரி மன்னன் காலத்தில் தொடங்கி அனந்தகேசரி மன்னனின் காலத்திலும் தொடர்ந்

29-4-63உ புதுடில்லியில் திருமுறைத் துவக்கவிழா



தும் லலாடேந்து கேசரி காலத்தில் பூர்ண மடைந்ததெனவும் கூறுவார்கள். அதன் உயரம், நோக்குவோருக்குத் தன் செங்குத்தான வரிக்கோடுகளால் பெரிய விமானமொன்றில் சிறிய விமானங்கள் பக்கத்திற்கு இரண்டென இணைக்கப்பட்டுள்ள விந்தையைத் தெரிவிக்கும். விமான சிகரமோ வரியுள்ள நெல்லிக்கனி போன்ற ஆமலகத்தை தாங்கியுள்ளது. ஆமலகத்தின் மேல் கலசம் பொருத்தப்பட்டுள்ளது. பல சிறிய கோயில்களிடையே நின்றுலும் இதன் பாகங்களாக "தெவுலி" அல்லது "ஸ்ரீமந்திரி" எனப்படும் கர்ப்பக்கிருக விமானமும் "சக்மேக" எனப்படும் மண்டபமும், 'நடமந்திரெ"னும் நாட்டிய அரங்கமும், "போகமந்திரெ"ன்னும் நிவேதன மண்டபமும் வரிசையாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன. கர்ப்பக் கிருகவிமானம் 127 அடி செங்குத்தான உயரம் கொண்டது. இதன் உள்ளேதான் சுயம்பு லிங்க ரூபியாக பரமசிவன் விளங்குகிருர். உள்பாகம் காலியாகவும், வெளிப்புறம் முழுமையும் சிற்பங்களால் சித்திரிக்கப்பட்டுமுள்ள இக்கோயிற் காட்சி, கண்டோர் மனதைக் கவரும் வகையில் அமைந்துள்ளது. இக்கோயிலைக் கட்ட ஒரு லட்சம் பொன் செலவானுல் அதில் காணும் சிற்பங்களைச்சித்தரிக்க 3 லட்சம் பொன் செலவாகியிருக்கும் என பெர்குசன் துரை மதிப்பிட்டிருக்கிருர். செடி, கொடி, மிதுனங்கள், படிமங்கள்–அவைகளில் முக்கியமாக உமையுடையவும், குகனுடையவும் படிமங்கள்–பல்வேறு உருவங்களில் சிற்பக்கலை இங்கு பிரகாசிக்கின்றது. கல், கண்டகிரி குன்றிலிருந்தே வெட்டிக் கொண்டு வரப்பட்டதெனத் தெரிகிறது. தற்காலம் "சரநாராயண"மெனப்படும் அருகிலுள்ள சிறு கோயிலிலிருந்து சாரம் கட்டி கற்கள் லிங்கராசத்தின் உச்சியில் ஏற்றப்பட்டன என்று அங்குள்ள முதியோர் கூறுவர். சுமார் 500 கோயில்களுக்கிடையே செங்குத்தாக உயர்ந்தும் வெகுதூரத்திலிருந்தே நம் கண்ணைக் கவரும் வகையில் அமைந்துமுள்ள இப்புவனீசுவரமென்னும் லிங்கராசமே "கலிங்கத்தின் கண், கோயில்கொண்ட சிவபெருமானைக் காணவாரீர்" எனப் பறை சாற்றுகின்றதெனலாம்.

சுப்பிரமணியர் விருத்தம்

இந்நூல் தொண்டை மண்டலத்துத் தொட்டிக்கலை என்னும் ஊரில் தோன்றிய சுப்பிரமணிய முனிவர் என்னும் அருளாளரால் இயற்றப் பெற்றது. இவர், சைவ வேளாளர்; மாதவச் சிவஞான முனிவர்க்கு மாணவர்; இலக்கிய, இலக்கண சமய நூல்களில் வல்லவர். தொழுநோயுற்ற ஒருவன் மீது இரக்கம் கொண்டு இச் சுப்பிரமணியர் திருவிருத்தத்தைப் பாடிக் கொடுத்து ஓதச்செய்து, குணமடையச் செய்தவர். இந்நூலின் அருமையின் எளிய அழகும், பெருமையும், ஓதற்கினிய ஓசை யமைப்பும் உணர்ந்தின்புற்ற அன்பர்கள் வேண்டுகோளுக் கிணங்க, இது இங்கு வெளியிடப் பெறுகின்றது. இது, பன்னி ரண்டு திருவிருத்தங்கள் கொண்டது.

— நிர்வாக ஆசிரியர்.

மாமேவு நவரத்ன கேயூர மணிமகுட
மன்னிப் பொலிந்தமுடியும்
வச்சிர நுதல்திலக வெண்ணீறும் ஓராறு
வதன விம்பத்தின்அழகும்
பாமேவு பத்தர்க்கு மடைதிறந்து அன்பொழுகு
பன்னிரு விழிக்கருணையும்
பகரறிய பழமறை பழுத்தொழுகு சிறுநகைப்
பவளம் சிறந்தவாயும்
காமேவு கரகமல பந்தியும் சேவலும்
கனக மயிலும்கிண்கிணிக்
காலும்முந் நூலும்வடி வேலும்என் மேலும்எக்
காலும் துலங்கவருவாய்
தாமோத ரானந்த கோவிந்த வைகுந்த
சரச கோபாலன் மருகா
சதுர்மறைகளே தந்த பரமகுருவாய் வந்த
சரவண பவானந்தனே. 1

கண்கண்ட பூச்சக்ர வாளகோ ளத்தையொரு
கதிகொண் டெழுந்துசுற்றிக்
ககனகூ டந்தடவி யுகசண்ட மாருதக்
காலொடு சுழன்றுபின்னி
விண்கொண்ட மேகபட லத்தைச் சினந்துதன்
மெய்யன்பன் எனஉகந்து
விடஅரவின் மகுடமுடி சடசடென உதறிநெடு
மேருவொடு பாய்ந்துகொத்தித்
திண்கொண்ட வல்லசுரர் நெஞ்சுபறை கொட்டத்
திடுக்கிட இடித்துமோதித்
திறைகொண் டடித்தமரர் சிறைகொண் டனைத்துலகும்
திறைகொண்ட மயில்வாகனு
தண்கொண்ட நீபமலர் மாலையணி மார்பனே
சரச கோபாலன் மருகா
சதுர்மறைகளே தந்த பரமகுருவாய் வந்த
சரவண பவானந்தனே. 2

துன்னுகயி லாயகிரி மேருகிரி கந்தமலை
தோகைமலை கயிலைமலைவான்
சோலைமலை மேவியவி ராலிமலை மன்னிய
சுவாமி மலையும்சிறந்த
சென்னிமலை வேளூர் கடம்பமலை மேலவயல்
திருவருணை யின்கோபுரம்
திருஆவி னன்குடி பரங்கிரி திருத்தணிகை
சிவாசலம் திருவேரகம்
இந்நிலம் மதிக்கும் திருச்செந்தில் முதலான
எண்ணப் படாதகோடி
எத்தலமும் நின்கருணை வைத்துவிளை யாடல்விதம்
எத்தனை எனச்சொல்லுவேன்
தன்னைநிகர் ஒவ்வாத பன்னிருகை வேலனே
சரச கோபாலன் மருகா
சதுர்மறைகளே தந்த பரமகுருவாய் வந்த
சரவண பவானந்தனே. 3

நதியெங்கும் மூழ்கித் தலந்தோறும் சுற்றியும்
நல்ல நியமங்கள்செய்தும்
நான்என்ற ஆணவம் தள்ளினோம் என்றுசிவ
ஞானங்கள் பலபேசியும்
கதிகொண்ட மவுனியாய் அட்டமா சித்தியொடு
கற்பம் தனைப்புசித்தும்
கண்ணிறுக மூடிச் சிவானந்தம் என்றுசெயல்
கண்டிருந் தோம்என்னவும்
எதிர்ஒரு வருக்கொருவர் தர்க்கித்து மற்கட்டி
இப்படி அனந்தகோடி
இதுஅல்ல அதுஅல்ல என்று போராடுவதும்
என்ன வகையோஅறிகிலேன்
சதம்என்ன உன்னைநான் நம்பினேன் நம்பினேன்
சரச கோபாலன் மருகா
சதுர்மறைகளே தந்த பரமகுருவாய் வந்த
சரவண பவானந்தனே. 4

———

(தொடரும்)

ராகம் : பைரவி. தாளம் : ஆதி

பல்லவி

தாமரை மலரினில் வாழும் தயாநிதியே
தருணமிதே நீ தயை புரிவாய்

அநுபல்லவி

கார்த்திகாயினி கலைகளின் தேவி
கருணாகரி கமல நீ வாசினி (தாமரை)

சரணம்

அருமறைகள் போற்றும் ஆரணங்கே
அருள்ஒளிவிழி ஆரமுதே
மலரயன் நாவில் வாழ்ந்திடும் வேணி
மதுரவாணி மனமது இரங்கி நீ
மதி எனக் களித்திடு வீணைபாணி.

சு. விசயாம்பிகை,
ஸ்ரீவைகுண்டம்.

ஈங்கோய் இலக்கியம்

திரு. கு. பழநிசாமி அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் கல்லூரி, அருள்நந்தி நகர்.

மனிதனும் குரங்கும்

மனிதனுக்கும் குரங்கிற்கும் நிறைய ஒப்புமைகள் இருக்கின்றன. பலகாலங்களாக மனித சமுதாயத்தை ஒட்டியே வாழ்ந்து வந்த போதினும், குரங்கினைக் காணும் போதெல்லாம் மனிதனின் நெஞ்சில் இன்னும் வியப்பு மிஞ்சாமல் இருப்பதில்லை. அவற்றின் குறும்புச் செயல்கள் பிள்ளைகளுக்குக் கொள்ளை மகிழ்வாக இருக்கின்றன. அவைகளின் செயல்களைக் கண்டு மகிழாத பெரியவர்களும் இலர். கலைஞர்களுக்கும் கவிஞர்களுக்கும் குரங்குகளின் வாழ்வும் மகிழ்வும் பெருமகிழ்வு ஊட்டுகின்றன.

பண்டைய இலக்கியத்தில்

இக்குரக்கினத்தின் பல்வேறு செய்திகளையும் அவற்றினைப் பற்றிய பல்வேறு குறிப்புக்களையும் பற்றித் தமிழ் நாட்டுக் கவிஞர்கள் சுவைபடச் சொல்லியிருக்கின்றனர். குரங்கினங்களின் குறும்பினையும், அவைகளின் அறிவுத்திறனையும் பற்றிப் பல பாடல்கள் பாடிச் செல்கின்றனர். சிலபோது சிறந்த கருத்துக்களைத் தெளிவுபடுத்தவும் குரங்கினங்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கவிஞர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

குறுந்தொகையில் ஒரு பாட்டு. தனது கணவன் இறந்து படப், பெண்குரங்கு அப்பெரும் பிரிவைப் பொறுக்க முடியாமல்

தவித்தது. கைம்மை நோன்பிருந்து வாடவும் அதற்கு விருப்ப மில்லை. தனது உயிரை நீத்துவிட முடிவு செய்து விட்டது. அப்போது தனது ஒரே குட்டியின் நினைவு அதற்கு வருகிறது. இருப்பினும் அம்மகவிற்காக அது வாழத் துணிந்து விடவில்லை. அக்குட்டியை எடுத்துக் கொண்டு தனது சுற்றத்தாரிடம் செல் கின்றது. அங்கே தனது குட்டியை அவர்கள் பொறுப்பில் சேர்த்துவிட்டு மலைமுகட்டில் ஏறித் தனது உயிரை மாய்த்துக் கொள்கின்றது. 'இப்படிப்பட்ட நாட்டை உடைய தலைவனே இரவிலே வராதே' என்கிருள் தோழி. இப்படி ஒரு நிகழ்ச்சியின் மூலம் தலைவனுக்கு ஒரு சிறந்த கருத்தைத் தோழி தெளிவு படுத்துகின்ருள்.

"கல்லாக் குரங்கும் கணவன் இறந்துபட்டதைப் பொறுக்க இயலாமல் தானும் இறந்துவிட்ட தென்ருல் அறிவு நலமும் அன்பு நலமும் சான்ற தலைவி உனக்குச் சிறு ஊறு நேரினும் உயிர் துறப்பாள். எனவே நீ இரவில் வர வேண்டாம். பகலில் வருதலும் எதற்கு? பலரும் அறிய இவளை மணந்து கொண்டு வாழ்க்கை நடாத்து" என்ற பொருண்மை இதனுள் விளங்கு கின்றது என்பர். இவ்விதம் குரங்கினங்களின் வாழ்க்கை நிகழ்ச்சி மனிதவர்க்கத்தூடு இயைய பல இடங்களில் காணப்படு வதைச் சங்க இலக்கியங்களில் காணலாம்.

மரபு வழிப் புலவர்

அத்தகைய புலவர் மரபில் வந்த நக்கீரதேவ நாயனுரும் குரங்குகளின் பல்வேறு செயல்களைத் திரு ஈங்கோய்மலையில் கண்டு வியந்து பாடியிருக்கின்ருர். குரங்கினங்களைப் பற்றிய இவரது வருணனை பண்டைய இலக்கிய மரபையும் வழக்காற் றையும் (Traditional and Conventional) விட்டுத் தாண்ட வில்லை என்ருலும் சுவை பயக்கின்றது.

காந்தள் மலரில் கருவண்டு

வானைத் தொட விரும்பும்மலை. அதன்மீது செங்காந்தட் பூக்கள் செக்கச் செவேலென மலர்ந்திருக்கின்றன. மருங்கே ஒரு மந்தி இதைப் பார்த்தவண்ணம் அமர்ந்துகொண்டிருக்

கின்றது. அதற்கொரு ஐயம். அதிர்ச்சியும் கூடத்தான். திடீர் திடீர் என்று இந்த மலையில் தீப்பிடித்துக் கொள்வானேன்? அதற்கு விளங்காத செய்திகளுள் இதுதான் அதனை மிகுதியும் துன்பப் படுத்துவது. நல்லவேளை! பிடித்துக் கொண்ட தீ காடு முழுவதும் பரவாமல் விட்டதே அதுவரையிலும் கடவுள் புண்ணியந்தான். இவ்விதம் எண்ணிக்கொண்டு அனல்வீசாத அவ்வழகிய தீயைப் பார்த்தபடி உட்கார்ந்து கொண்டிருக்கிறது அந்தக் குரங்கு.

இவ்வாறு பரவவும் செய்யாமல் அனலும் வீசாமல் அசைந்து அசைந்து எரிந்து கொண்டிருக்கின்ற தீயினை அதனால் புரிந்து கொள்ள முடியவில்லை. வியப்பு ஒருபுறம். வேதனை ஒருபுறம். அதனைவிட்டு அகன்று போகவும் ஏக்கம். அணுகவும் அச்சம். எனவே அடிக்கடி எழுவதும் எட்டித் தீயைப் பார்ப்பதுமாக உட்கார்ந்து கொண்டிருக்கின்றது.

அந்தச் சமயத்தில் ஓர் வண்டின் ரீங்காரம் அதன் செவிகளில் பாய்கிறது. திரும்பிப் பார்ப்பதற்குள் பறந்து வந்த வண்டு எரிபோல் இருந்த செங்காந்தட் பூவினை நெருங்கி விட்டது. குரங்கு ஒருகணம் தவியாய்த் தவித்து விட்டது. எங்கள் காட்டு இசைவாணன் ஆயிற்றே! சொல்வதற்குக்கூட இடமின்றித் தீயை நெருங்கி விட்டதே! எரிகின்ற தீயைக் கவனிக்காமல் அல்லவா அதனை நோக்கி ஓடுகிறது. என்ன செய்வது?

அதற்குக் கையும் புரியவில்லைக் காலும் புரியவில்லை, தீயின் கொடுமையும், வண்டின் மென்மையும் அதன் அறியாமையும் ஒரு சிறிய போராட்டத்தையே ஏற்படுத்திவிட்டது குரங்கினிடத்தில். கண்கள் இருளுவதுபோல அதற்கொரு மயக்கம். விழித்துப் பார்க்கையில் வண்டு மலரில் உட்கார்ந்துவிட்டது மட்டுமல்ல. தேனை அருந்த உள்ளேயும் நுழைந்துவிட்டது.

குரங்கிற்கு அதற்குமேல் உட்கார்ந்திருக்க முடியவில்லை. இருந்த இடத்தைவிட்டு எழும்பிக் குதித்தது. வாயோ பேச முடியவில்லை. கிட்டப் போவதற்கோ அச்சம். மனதிலோ

வண்டினைக் காப்பாற்ற வேண்டும் என்ற கருணை. ஒரே குழப்பம். எழுகின்றது. உட்காருகின்றது. காப்பாற்றப் போகலாமா என்று ஒருகணம். அடுத்த கணம் அச்சம் ஆட்கொள்ளுகிறது. ஒன்றும் புரியாமல் கையைப் பிசைகிறது. முகத்தில் ஒரே வேதனைக் குறிப்பு. ஐயோ வண்டு தீயினுள் முழுகிவிட்டதே. என்ன செய்வது? அடிக்கடி கையை நெரித்துக் கொள்கிறது. இவ்விதம் குரங்கொன்றின் அன்பு மனமும், அறியாமையும், அச்ச உணர்ச்சியும் அழகுறப் பின்வரும் பாட்டில் வெளிப்படுத்தப் படுகிறது.

வழகிதழ்க் காந்தள்மேல் வண்டிருப்ப ஒண்தீ
முழுகியதென் றஞ்சி முதுமந்தி—பழகி
எழுந்தெழுந்து கைந்நெரிக்கும் ஈங்கோயே திங்கட்
கொழுந்தெழுந்த செஞ்சடையான் குன்று.

குரங்கின் வேதனை உணர்ச்சியைக்காட்ட "எழுந்தெழுந்து கைந் நெரிக்கும்" என்று கவிஞர் சொல்லியிருக்கும் முறையும் பாட்டில் அமைந்திருக்கும் கற்பனையும் பாராட்டத் தக்கன.

எரியும் கொள்ளியா இலவமலரா ?

நீண்டுயர்ந்த இலவமரம். பலநாட்கள் அதன் உச்சிவரை அச்சம் ஏதும் இன்றி ஓடியும் ஆடியும் விளையாடி இருக்கின்றது அக்குரங்கு. அப்போது அம்மரத்தில் ஏதும் தொல்லையோ தடையோ அதற்கு இருந்ததில்லை. ஒருநாள் இலவ மரத்தில் சில மலர்கள் மலர்ந்தன. இலவு பூத்துவிட்டால் தீப்பிடித்துக் கொண்டு எரிவதுபோல் காட்சியளிக்கும். ஒவ்வொரு பூவும் தீப்பந்து தொங்குவது போலத் தோன்றும். எனவே இதனை எரி மலர் இலவம் என்று பாடுவர் புலவர்.

அன்று வழக்கம்போல் கண்விழித்த குரங்கிற்கு நெஞ்சே உலர்ந்து விட்டது. பூக்கள் ஒவ்வொன்றும் எரிகின்ற கொள்ளி தொங்குவது போன்று அதற்குப்பட்டுவிட்டது. ஒருநாள்கூட இக்காட்டில் அமைதியாகப் பொழுது போகாதுபோல் இருக் கிறதே! இந்த மரமுமா தீப்பிடித்துக் கொள்ளவேண்டும்? எப்படி நீண்டுயர்ந்த அழகான மரம்! இதில் எத்தனை கொள்ளிகள்

தாம் தொங்குவது. நிலைமை இப்படியே நீடித்தால் மரம் முழுவதும் தீப்பிடித்துக்கொள்ளும். என்ன செய்வது?

அச்சம் அதிகமாகிவிட்டது குரங்கிற்கு. பக்கத்தில் விரைந்து சென்று மூங்கில் தழைகளை ஒடித்துக்கொண்டு வருகிறது. பச்சைத் தழையால் விசிறினால் ஒருக்கால் தீ அணைந்தாலும் அணைந்துவிடும் என்பது அதன் எண்ணம். எண்ணம் விரைவில் செயலாக மாறிவிட்டது. அது நெருப்பாக இருந்தால் தானே அணைய? நெருப்பும் அணையவில்லை. குரங்கும் வீசுவதை நிறுத்தவில்லை. சிவந்த இலவமலரும், அதன் மருங்கிலே இருந்த குரங்கும் சேர்ந்து எழவைத்த கற்பனை ஓவியமே இது.

இதனை,

ஓங்கிப் பரந்தெழுந்த ஒலிஇலவத் தண்போதைத்
தூங்குவதோர் கொள்ளி எனக்கடுவன் — மூங்கில்
தழைஇறுத்துக் கொண்டோச்சும் ஈங்கோயே சங்கக்
குழைஇறுத்த காதுடையான் குன்று.

பளிங்கிலே பழுத்த பழங்கள்

குறும்புத்தனம் மிக்க குரங்குகளுக்குப் பசிவந்து விட்டால் கேட்கவும் வேண்டுமா? பளிங்குக் கற்கள் கிடந்த அவ்வழியாகப் பசியோடு ஒரு குரங்கு வந்து கொண்டிருந்தது. அதன் எதிரே தரையில் ஒரு பெரிய பழக்குலை. அதற்கு ஒரே வியப்பு. எவ்வளவு நல்ல பழங்கள்! பற்றுவதற்காகக் கையை வைத்தது. பாவம்! பழங்கள் தோன்றுகின்றன. ஆனால் கையில் தட்டுப்படவில்லை. தடவிப் பார்த்தது. பளிங்கில் தோன்றும் பழங்களின் நிழல் எப்படி கையில் தென்படும்? வியப்போடும் பழக்குலை பெறாத வேதனையோடும் கீச்கீச் எனச் சத்தமிடுகிறது. மேலே மரத்தில் தொங்குகின்ற பழக்குலைதான் கீழே உள்ள பளிங்கில் தோன்றுகின்றது என்று அதனால் ஊகிக்க முடியவில்லை. சற்று நேரத்தில் ஒரு குரங்குக் கூட்டமே அங்கு வந்து சேர்கின்றது.

பளிங்கை நோக்கிய வண்ணம் கூச்சலிடுகின்ற குரங்கை எல்லாக் குரங்குகளும் நெருங்குகின்றன. அந்தக் குரங்குக்கு

வருத்தம் ஒருபுறம், பழம் இருக்கின்றது என்பதைக் காட்டிவிட வேண்டும் என்ற வேட்கை ஒருபுறம். உடனே பளிங்கில் தோன்றிய கனிகளைச் சுட்டிக் காட்டியது. அவைகளும் அந்த இனந்தானே! வேறு ஏதும் எண்ணுமல் பழங்கள் தென்பட்ட உடனே பரபர என்று பளிங்குக் கற்களைப் பறிக்க ஆரம்பித்து விட்டன. எல்லாக் குரங்குகளும் ஆளுக்கொருபக்கம் தரையைத் தோண்டுகின்றன. ஒரே கூச்சலும் ஆரவாரமும் அந்த மலைப் பகுதியை நிரப்புகிறது. இக்குரங்குகளின் இவ்வறியாமையை இனிமைபட எடுத்துச் சொல்கின்றுர் கவிஞர் பெருமான்.

கல்லாக் குரங்கு பளிங்கில் கனிகாட்ட
எல்லாக் குரங்கும் உடன்ஈண்டி — வல்லே
இருந்துகிரால் கல்கிளைக்கும் ஈங்கோயே மேனி
பொருந்தஅராப் பூண்டான் பொருப்பு.

குட்டிகளைப் பாராட்டும் குரங்கு

மலைக்காடுகளில் குரங்கினங்களுக்குக் கிடைக்காத பழங்கள் இருக்க முடியாது. பழங்கள் முதலிய உணவைக் கரங்களில் ஏந்தியும். வாயில் அடக்கியும் கொண்டு வந்து கொடுக்கும் தன்மையன குரங்குகள்.

சிவந்த முகத்தையுடைய அந்த மந்தியும் தனது குட்டிகளுக்கு உணவுதான் கொண்டு வருகின்றது. நல்ல வேரிலே பழுத்த பலாச் சுளைகளைப் பேர்த்து எடுத்துக் கொண்டு ஓடோடி வருகின்றது. எதிர்பார்த்த வண்ணம் இருக்கும் தனது குட்டிகளை அணுகுகின்றது. தான் கொண்டு வந்த சுளைகளைக் கொடுத்து உண்ணச் செய்கிறது. அதுவரை ஆடி ஓடித் தொல்லை கொடுக்காமலும், கூடவே இரை தேடுகின்ற இடத்திற்கு வாராமலும், தாய் வந்ததும் வராததுமாக அதன் கையில் உள்ள உணவைப் பிடுங்காமலும் இருந்த தனது குட்டிகளின் பெருங்குணம் அதன் தாயைக் கவர்ந்து விடுகின்றது. தனது குட்டிகளை அருகில் உட்கார வைத்துக் கொண்டு அவைகளின் சிறப்பை எண்ணி மகிழ்ந்து நெஞ்சிலே பாராட்டிய வண்ணம் பலாச் சுளையை ஊட்டுகின்றது அந்தக் குரங்கு.

ஈங்கோய்மலை நாதரை மண்ணும் விண்ணும் பரவி மகிழ்கின்றது. வானத்து அமரர்களும் ஈங்கோய் மலையில் வந்து அவரை வழிபடுகின்றனர். அவர்களுள் ஒருவராக நின்று வழிபடும் நக்கீர தேவ நாயனுர் அங்கு தன்குட்டியின் வான்குணத்தைப் பாராட்டும் இக்குரங்கையும் காண்கிருர்.

தேன்பலவின் வான்சுளைகள் செம்முகத்த பைங்குரங்கு
வான்கொணர்ந்து மக்கள்கை யில்கொடுத்து – வான்குணங்கள்
பாராட்டி ஊட்டும்சீர் ஈங்கோயே பாங்கமரர்
சீராட்ட நின்ருன் சிலம்பு.

மலைத்தேன்கூடும் மந்தியும்

மந்திக்குத் தெரியுமோ மாலையின் அருமை. அதன் மென்மையும் சிறப்பும் அதற்குத் தெரிய நியாயமில்லை. அதன் குணம் அதனைத் தெரிந்து கொள்ளவும் விடாது. அதற்கு வேண்டியதாக இருந்தால் கூட அதனையும் சிதைத்து ஏற்றுக் கொள்வதில்தான் அதற்குப் பெருமகிழ்ச்சி உண்டு.

வயது ஆகிவிட்டது. உடலில் தளர்ச்சி. உள்ளத்திலும் தளர்ச்சிதான். ஆனுல் அந்தக் குரங்கின் குறும்பில் ஏதும் தளர்ச்சி இல்லை. அதன் அறியாமையோ அசட்டுத்தனமோ நீங்கி விடவில்லை.

எதிரிலே ஒரு தேன் கூடு. அதைப் பார்த்து விட்டது அந்த முதுமந்தி. ஈக்கள் நிறைய மொய்த்துக் கொண்டிருக்கின்றன. தன்போக்கில் பேசாமல் போக வேண்டியதுதானே? அது எப்படிப்போகும்? கீழ கிடந்த ஒருகோல் அதன் கண்ணில் பட்டதும் அதற்குப் பளிச்சென்று ஒரு மணியான யோசனையும் தோன்றிவிட்டது.

எதிரிலே தேன் கூடு. அதனை மொய்த்துக் கொண்டு கசமுசவென்று ஈக்கள். அந்த குரங்கின் கையிலே ஒரு கோல். அந்த யோசனை வேறு என்னவாக இருக்கமுடியும்? கையில் இருந்த கழியால் அதன் கூட்டின்மேல் ஓங்கி ஒரு போடு போடுகிறது. குப்பென்று ஈக்கள் வெளியே பறக்கின்றன. தேன் தரதரவென்று கீழே கொட்டுகின்றது.

ஆயிரம் தேனித் தச்சர்கள் கூடிக்கட்டிய அழகான மண்ட பத்தை உடைத்துக் கொட்டிப் பெரிய காரியத்தைச் சாதித்து விட்டதாக அந்த குரங்கிற்கு ஒரு எண்ணம். ஒரு செயலில் இரண்டு நிகழ்ச்சிகள். பறக்கின்ற ஈக்களின் இரைச்சல்; தரதர வென்று ஊற்றும் தேன். இவற்றைக்கண்டு மகிழ்ச்சி அடை கிறது அந்தக் குரங்கு.

இன்னொரு இளைய பெண் குரங்கு. யாருக்குவேதனையோ யாருக்கு மகிழ்ச்சியோ. அதற்கு அதைப்பற்றிக் கவலை இல்லை. தேனாறு பாய்கிறது அங்கே; கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருப்பானேன். ஒரு வாழை இலையைக் கிள்ளிக் கொண்டு வந்து அதில் நீட்டுகின்றது. அதன் இன்னொரு முனையை வாய்க்கால் போல் தன் வாயில் வைத்துக் கொண்டு தேனைக் குடிக்கின்றது.

சோம்பித்திரிந்த குரங்கிற்கு அது விளையாட்டு. சுறு சுறுப்புடைய தேனிக்களுக்கோ அது வேதனை. மற்றுமொரு குரங்கிற்கு அது வயிற்றை நிரப்பிக் கொள்ளும் தந்திரமாகவும் மாறிவிடுகின்றது. திரு ஈங்கோய் மலையில் என்னதான் நடக்க வில்லை.

கூழை முதுமந்தி கோல்கொண்டு தேன்பாய
ஏழை இளமந்தி சென்றிருந்து—வாழை
இலையால்தேன் உண்டுவக்கும் ஈங்கோயே இஞ்சி
சிலையால்தான் செற்றான் சிலம்பு.

இதுதான் அந்தப் பாடல். குரங்குகளின் செயலைக் குறிக்கும் வேறு பல பாடல்களும் நூலுள் காணப்படுகின்றன.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 14, இதழ் 8-ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

·(More commonly referred to as APPARSWAMI)

34, மனமெனுந்தோணிபற்றிமதியெனுங்கோலையூன்றிச்
சினமெனுஞ்சரக்கையேற்றிச்செறிகடலோடும்போது
மதனெனும்பாறைதாக்கிமறியும்போதறியவொண்ணு
துணையுனுமுணர்வைநல்காயொற்றியூருடையகோவே.

34. When on life's angry waves I launch,
    My heart's the raft I take to me,
My mind's the pole I lean upon,
    Vexation's freight I bear to sea.
I strike upon the rock of lust!
    O then, though witless quite I be,
Grant, King of holy Ottiyur,
    Such wisdom that I think of Thee.

சிவ சிவ

திரைலோக்கிய சுந்தரர் கோசம்வர்த்தன நிதி ரூபா 7,000/-

'சீரோங்கும் பொழில்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே
செழுமதில்சூழ் பொழில்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே
செஞ்சாலி வயல்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே
திருந்துவிழவு அணிகோடைத் திரைலோக்கிய சுந்தரனே
காந்தாரம் சீர்அணைத்த பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே'

என்று காந்தாரப் பண்ணில் கருவூர்த் தேவரால் திருவிசைப்பா பாடப்பெற்ற சிறப்பு வாய்ந்த திரைலோக்கிய சுந்தரர் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள திருலோக்கி என்ற தலத்தில் திரைலோக்கிய சுந்தரருக்கு நாடோறும் பால் அபிஷேகம் செய்வித்தற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இத்தர்மம் நிறுவப்பெற்றது. இது 'திரைலோக்கிய சுந்தரர் கோசம் வர்த்தன நிதி' எனப் பெயர்பெறும்.

2. இதற்குரிய முதற் பொருள் ரூ. 7000/- ரூபா ஏழாயிரம். இது ஆண்டொன்றுக்கு 3% வட்டி தரக்கூடிய அரசியல் கடன் தாள்களில் முதலீடு செய்யப்பெற்றுள்ளது. 3% கண்வர்ஷன் லோன் ஆப் 1946 – சர்க்கார் கடன் பத்திரம் என் சிஏ. 240204 ரூ. 2000/- சிஏ. 240206 – ரூ. 2000/- சிஏ. 240215 – ரூ. 1000/- சிஏ. 240216– ரூ. 1000/- சிஏ. 209965/– ரூ. 500/- சிஏ. 241065– ரூ. 500/- ஆக ரூ. 7000/- ரூபா ஏழாயிரம். இது நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலனம் செய்யப் பெற்று வரும்.

இம்முதற் பொருளினின்று கிடைக்கும் வட்டித் தொகையில் எண்டௌமெண்ட் நடத்துவதற்குரிய சில்லரைச் செலவு போக எஞ்சிய தொகையில் திருப்பனந்தாளுக்குக் கிழக்குத் திசையில்

இரண்டாவது மைலிலுள்ள திருலோக்கியில் சுந்தரேசுவரசுவாமி கோயிலில் ஆண்டுதோறும் ரூ. 150/- (ருபா நூற்று ஐம்பது) பசு ஒன்று வாங்கவும் மீதித் தொகை அப்பசுவைப் பராமரிக்கவும் செலவு செய்யப் பெற்றுவரும்.

4. மேலே குறிப்பிட்ட வட்டித் தொகை முழுவதும் திருலோக்கி சுந்தரேசுவரர் கோயில் மானேஜிங் டிரஸ்டிக்கு ஆண்டு தோறும் கொடுக்கப்பெற்று வரும். ஷ டிரஸ்டி ரூ. 150/- விலையில் ஒரு பசு வாங்கிப் பராமரித்து வரவேண்டும். அப்பசு தரும் பாலை நாடோறும் திரைலோக்கிய சுந்தரராகிய சிவலிங்கப் பெருமானுக்கு அபிஷேகம் செய்வித்தல் வேண்டும்.

5. பசு பால் தருதலை நிறுத்தினல் அப்பசுவை விற்று விட்டு, அத்தொகையைக் கொண்டு வேறு பசு வாங்கி வாங்கிய விபரத்தை நமக்கும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களுக்கும் ஷ தேவஸ்தான மானேஜிங் டிரஸ்டி தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

6, ஆண்டு தோறும் வரவு செலவுக் கணக்கை நமக்கும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்களுக்கும் ஷ கோவில் டிரஸ்டி அனுப்பிவருதல் வேண்டும். அக்கணக்குடன் எவ்வளவு பால் நாள்தோறும் சராசரி அபிஷேகம் செய்யப்பெற்றது என்று விபரமும் தெரிவித்தல் வேண்டும்.

7. பசு வாங்குவதற்கு ஆண்டுதோறும் அளிக்கப்பெறும் தொகை வட்டி வரவுக்கு ஏற்பக்கூட்டவும் குறைக்கவும் பெறும். இத்தருமம் வேறு எம்முறையிலும் மாற்றி யமைக்கப்பெறமாட்டாது. இம் முதற் பொருள் நம்பேரிலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்துவரும். இத் தொகை திரும்பி யளிக்கப்பெறில் அதிக வட்டி தரக்கூடிய அரசியல் கடன்தாள்களில் முதலீடு செய்யப்பெறும்.

திருப்பனந்தாள்,
6-2-1963. } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

Registered at Tiruvadamarudhur Sub-Registrar's office on 7-2-1963 as No. 8 of 1963 of Book 4 volume 50, pages 135 to 137.

கலைக்கோயிலில் வரப்பெற்றுக்கொண்ட புத்தகங்களின் விபரம். (தொடர்ச்சி)

தொடர் எண்	புத்தகத்தின் பெயர்	ஆசிரியரின் பெயர்
9920	திருப்புகழ்	ராவ்பகதூர். தணிகைமலை வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.
9921	சிவபோகசாரம்	ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.
9922 to 23	காஞ்சிமாநகரம்	ஷ ஷ
9924 to 27	மதுரை மாநகரம்	ஷ ஷ
9928 to 31	சிவஞானபோதச் செம்பொருள்	ஷ ஷ
9932 & 33	திருக்குறள் அறத்துப்பால் (இலக்கணக் குறிப்பின் விளக்கம்)	வித்துவான். ஔவை. சுந்தரேச வாண்டையார்.
9934 te 38	பன்னிருதிருமுறை (முதற்பகுதி) முதல் ஏழு திருமுறைகள்	அண்ணுமலைப்பல்கலைக் கழகம், அண்ணுமலை நகர்.
9939 to 41	மதுரைச்சிலாசாசனத் திருமுறை	ஸ்ரீகாசி மடம், திருப்பனந்தாள்.
9942 & 43	திருவாசகம் திருச்சாழல்	ஷ ஷ
9944 to 48	அபிராமி அந்தாதி	தருமபுர ஆதீனம்.
9949 to 56	திருமுருகாற்றுப்படை, கோளறு பதிகம்.	ஷ
9957 to 64	திருவாசகம் சிவபுராணம்	இராம. தினமணிச் செட்டியார் தேவகோட்டை.

(தொடரும்)

திருப்பனந்தாள் - ஸ்ரீ காசி மடம்

'திருமுறை வெளியீடுகள்'

		ரூ. ந. பை
1	விநாயகர் திருமுறை ...	0 06
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) ...	3 50
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம் ...	3 00
4*	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம்மட்டும் புதிய பதிப்பு) ...	2 75
5*	திருநாவுக்கரசர் தேவாரம் ,, ,, ...	2 00
6*	சுந்தரர் தேவாரம் ,, ...	1 30
7*	திருவாசகம் ,, ...	0 56
8*	திருக்கோவையார்-பேராசிரியர் உரையும் பழையவுரையும் (புதிய பதிப்பு) ...	2 90
9	ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் (மூலம்மட்டும்) ...	0 56
10*	திருமந்திரம் ,, (புதிய பதிப்பு) ...	2 25
11*	பதினோராந்திருமுறை ,, ,, ...	1 50
12	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு) ...	0 25
13	திருக்கைலாயஞானவுலா - உரையுடன் ...	0 50
14	பெரிய புராணம் (மூலம்மட்டும்) (அச்சில்)	
15*	அகத்தியர் தேவாரத்திரட்டு ...	0 37
16	திருவிளையாடற் புராணம் (மூலம்மட்டும்) ...	3 00
17	கந்தபுராணச் சுருக்கம் (மூலம்மட்டும்) ...	1 75
18	கந்தபுராணம் – முதல் மூன்று காண்டங்கள் ,, ...	2 75
19	,, யுத்த தேவகாண்டம் ,, ...	2 00
20	,, தக்ஷகாண்டம் ,, ...	1 50
21	கந்தர் அலங்காரம் - குறிப்புரையுடன் ...	0 25
22	கந்தரனுபூதி ...	0 13
23	கந்தர் கலிவெண்பா – ஆங்கிலம் ஹிந்தி மொழி பெயர்ப்புக்களுடன் ...	0 37
24	கந்தர் கலிவெண்பா - மூலம் மட்டும் ...	0 10
25	கந்தர் கலிவெண்பா - மூலமும் – உரையும் ...	0 37
26	நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ...	0 50
27	சகலகலாவல்லிமாலை – ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ...	0 06
28	திருக்குறள் - அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும் ...	1 50
29	திருக்குறள் – பொருட்பால் ,, ...	2 50
30	திருக்குறள் – காமத்துப்பால் ,, ...	1 00
	ஷெ 28, 29, 30 திருக்குறள் 3 புத்தகமும் ...	4 00
31	திருக்குறள் மூலமும் குறிப்புரையும் ...	0 75
32	திருக்குறள் - பொருட்பால் பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம் ...	0 13

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No. 1485/57.

33	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்)	...	0 75
34	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள்	...	0 37
35	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா - மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - மதுரைக் கலம்பகம் - நீதிநெறி விளக்கம் - மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை- மதுரை மீனாட்சியம்மை குறம்	...	2 75
36	திருவாரூர் நான்மணிமாலை – முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்	...	1 25
37	சிதம்பர மும்மணிக்கோவை - சிதம்பரச் செய்யுட்கோவை- தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	...	1 00
38	பண்டார மும்மணிக் கோவை – காசிக் கலம்பகம் – சகலகலாவல்லி மாலை	...	1 00
39	சிதம்பரச் செய்யுட்கோவை	...	0 75
40	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்	...	0 50
41	பெரியபுராணம் – உரைநடை	...	2 00
42	திருவிளையாடற் புராணம் – உரைநடை	...	2 25
43	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும் கந்தர்கலிவெண்பா விளக்கப்படங்களும்	...	0 50
44	திருக்கயிலைத் திருமுறை	...	0 37
45	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும்	...	0 19
46	செந்திலாண்டவன் மகிமை	...	0 13
47	திருக்குறள் - உரைக்கொத்து - அறத்துப்பால் 3-ம் பதிப்பு	...	1 37
48	ஷை ஷை பொருட்பால் 2-ம் பதிப்பு	...	2 75
49	ஷை ஷை காமத்துப்பால் ஷை	...	1 20
50	அபிராமி அந்தாதி - தெளிவுரையுடன்	...	0 50
51	மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் (குறிப்புரையுடன்)	...	0 50
52	கந்தரநுபூதி-தெளிவுரையுடன்	...	0 35
53	திருவாரூர்-திருப்பதுவல்கள்	...	0 10
54	திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி	...	0 10
55	பழமொழித்திருமுறை	...	0 25
56	திருவாரூர் நான்மணிமாலை	...	0 50

மேலேகண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,
"வேதாரண்ய விலாசம்" 53, பின்னவர் கோவில்தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

குறிப்பு:- * இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறைப்பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 47, 48, 49) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:— குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் – '63.